ஸ்ரீ

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

ஸ்ரீதிருமங்கையாழ்வார் திருவாய்மலர்ந்தருளிய

# திருக்குறுந்தாண்டகம்.

இதற்கு

ப்ரதிபதமும,

ஸ்ரீ-உ-வேதாந்தேத்யாதி

பெரியவாச்சாம்பிள்ளை யருளிச்செய்த

வ்யாகயாநமும்,

இவை

வித்வான் அஷ்டாவதானம்

ஸ்ரீமத்

உபயவேதாந்த மேல்பாக்கம்

தாததேசிக தாதாசாரிய ஸ்வாமி

அவர்களால்

பல ப்ரதிகளைக்கொண்டு பிழையறப்

பரிசோதிக்கப்பட்டு

ஆவுல - கிருஷ்ணசாமிநாயுடு,

நகர் - அந்தல - மூர்த்திநாயுடு,

இவர்களால்

சென்னை மலைச்சாலை

கார்டியன் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டன.

ஆழ்வார் திருவவதாரவருஷம் - சகூஅக.

*Registered Copy Right.*

1879.



திருமங்கையாழ்வார்.

ஸ்ரீ



ஸ்ரீமதேராமாநுஜாயநமஃ.

திராவிடவேதமாகிய நாலாயிரப்ரபந்தத்துள்

# திருமங்கையாழ்வார் திருவாய்மலர்ந்தருளிய

# திருக்குறுந்தாண்டகம்.

## த னி ய ன்.

கலயாமிகலித்வம்ஸம் கவிலோகதிவாகரம்
யஸ்யகோபிஃப்ரகாசாபி ராவித்யம்நிஹதம்தமஃ

కలయామికలిధ్వంసం కవిలోకదివాకరమ్
యస్యగోభిః ప్రకాశాభి రావిద్యంనిహతంతమః

## நேரிசை வெண்பா.

வாழிபரகாலன் வாழிகலிகன்றி
வாழிகுறையலூர் வாழ்வேந்தன் - வாழியரோ [ன்
மாயோனைவாள்வலியர்ன் மந்திரங்கொண்மங்கையர்கோ
தூயோன்சுடர்மான வேல்.

ஶ்ரீ

# ப்ரதிபத அவதாரிகை.

ஶ்ரீயஃபதியாய், அவாப்தஸமஸ்தகாமனாய், அகிலஹேய ப்ரத்ய நீகனாய், கல்யாணகுண கணம ஹார்ணவனாய், ஸர்வஜ்ஞனாய், ஸர்வ ஸக்தனாய், அஶேஷ லோக சரண்யனாய், பக்தவத்ஸலனாய், ஸர்வவ்யாபியாய், ஸர்வாந்தர் யாமியாய், ஸகல ஜகஜ் ஜன்மஸ்தி விலய லீலனாய், ஸகல ஜகத்காரணனாய், ஸர்வகர்ம ஸமர்ராத்யனாய், ஸர்வ ஸ-லபனாய், ஸகல புருஷார்த்த ஸாதனமாய், எழுந்தருளி யிருக்கும் ஸ்ரீமந் நாரா யணன் நித்ய விபூதியில் சேஷ சேஷாஶநாதி நித்ய ஸூரிகளுடனும், முக்தர்களுடனும்கூடி நிஸ்ஸமாப்ய திகநிரவதிகாதி ஶயாநந் தாநுபவ பரவசனாகியும், லீலா விபூதியில் தத்தத் கர்மாநுகுணமாகத் தம்முடையஆஜ்ஞாநுஜ்ஞா ரூபங்களாகிய கைங்கர்யங்களுள் தத்ததி காராநுரூப கைங்காயங் களைச் செய்து, (உயர்வறவுயர்நிலம்) பெற்று தம்மோடு வாசியற நிரதிஶயாநந்த மடைவதன் பொருட் டளித்த கரண களே ப்ராதிகளையே பத்தசேதனர்கள் ப்ந்தஹேதுக்களான தீச் செயலுக்குக் கருவி யாக்கிக்கொண்டு பாழி விழுந்து கெட்டலைந் தநுபவிக்கும் ஜனன மரணாத்ய பரிமிதாஸஹ்ய துஃக்கச தங்களைக்கண்டு (வ்யஸநேஷு மநுஷ்யாணாம் ப்ருசம்பவிதிதுஃக்கிதஃ) என்று தளர்நெஞ்ச முடையவ னாதலால் மிகவுந் தயாரஸம்பூண்டு ஸித்த ஸங்கல்ப நாகையா லிவர் களை யொரு விரகாலல்லது மீட்க ஸங்கற்பத்தி லாமையால் (மக்னாநுத் தரதேலோகாந் காருண்யாச் சாஸ்த்ரபாணிநா) என்பது விவேகிகளிடத்தில் பயன்படுமல்லது மூடர்களுக்குப் பயன்படா வாதலின், (ஶாஸ்த்ரஜ்ஞாநம் பகுக்லேசம் புத்தேச் சலநகாரணம். உபதேசாத் தரிம்புத்வா விரமேத் ஸர்வகர்மஸு) என்கிறபடி ஓ ராசார்யமுகத்தா லிவர்களைத் திருத்தி முக்தராக்கத் திருவுளம்பற்றித் தந் திருச்சார்ங்காழ் வானைக் கடாக்ஷித்து நீர் லீலாவிபூதியிலொருசேதன விஶேஷத்திலநுப்ரவேசித்து நம்சடகோபன் செய்தருளின தமிழ் வேதத்திற் கங்கங்களிற் குறையின்றிச் செய்து அம்முகத்தால் மதியிலா மானிடர்களைத்திருத்திப் பணிகொண்டு வாருமென்று ஆஜ்ஞாபித்தருளினன். உடனே ஸ்ரீஶார்ங்காழ்வான் திருமங்கைமன்னனாக அவதரித்து ஸ்வாதிஷ்டாநசேதநப்ராரப்த்தாநுகுண பரிணதஜாத்யாத்யநு ரூப சௌர்யாதிகளுக்கும், அநுமந்தாவாய் ஸு-க்ருத பரிபாகத ஶாபேக்ஷராய்

எழுந்தருளி யிருந்தனர். பின்பு ஸ்ரீமந் நாராயணன் கால விளம்பாக்ஷமராய் தாமே எழுந்தருளித் தம் வடிவழகைக் காட்டி விஷயாந்தரத்தில் வைரஸ்ய முண்டாக்கித் திருமந்தி ரார்த்த ப்ரகாசம் செய்தருளி எழுந்தருள தத்க்ஷணோத்பூத பேதராய் (அக்நிர்தேவோத் விஜாதீநாம் முநீநாம் ஹ்ருதிதை வதம் ப்ரதிமாஸ்வ ப்ரபுத்தாநாம் ஸர்வத்ர ஸமதர்சிநாம்) என்பதைத் திருவுளம்பற்றிஸ்வயம் வ்யக்ததிவ்யார்ஷபேதங் களால் மூவகைப்பட்டு திருப்பதிகளி லெழுந்தருளியிருக்கும் அர்ச்சா ரூபியான எம்பெருமான்களை யநுபவித்துத் ததா நந்த பரீவாஹமாக "வாடினேன்வாடி,, தொடங்கி திருவெழுக் கூற்றிருக்கை யிறுதியாக வேதாங்கங்களைத் திருவாய்மலர்ந் தருளியும், மனம் நிலைக்காமல் பகவத்ஸம் ஸ்லேஷம் பெரு தொழிகையில் நிரதிசயதுஃக்காக்ராந்தராய் நிரதிசய ஸௌந் தரியாவா ளொரு வேற்கணாள் விஷயத்தில் காமதஸா பர் வங்களை முற்றுங்கடந்து சென்ற காமுகனைப்போல தத்விஸ் லேஷா ஸஹிஷ்ணுவா யிருமுறை மடலூர்ந்து நிற்கையிலினி உபேக்ஷாநர்ஹ பராகாஷ்டையை யடைந்தானென்று பெரு மாள் திருவுளம்பற்றி ஸேவை ஸாதித்தருள ததவிச்சிந்நாநு பவரஸத்ருப்தராய் யினி இவ்வநுபவத்தை யொரு பொழுது மிழக்கே னென்பதையும் த்ரிகரணங்களாலும் ஸர்வேந்திரி யங்களாலும் செய்யும், ததநுபவப்ரகாரங்களையும் முன்போ லினி வீண் பொழுது போக்கே னென்று தமக்குற்ற உறுதி யினையும் (பரித்ராணாயஸாதூநாம் விநாசாயசதுஷ்க்ருதாம், தர்மஸம்ஸ்த்தா பநார்த்தாய ஸம்பவாமி யுகேயுகே) என்கிற படி துஷ்டநிக்ரஹ ஸிஷ்ட பரிபால னார்த்தமான பகவத் விபவவர்ண நமுகத்தாலே அவனுக்குற்ற ஸர்வ ஸமாஸ்ரய ணீயதையையும் ஆஸ்ரிதவாத் ஸல்யாதி சயத்தையும் ஸகல புருஷார்த்தப்ரதாநஸ்வாதந்த்ரியாதிகளையும் அருளிச்செய்து தத்வாரா தம்மைப்போல் யாவனாயும் உஜ்ஜீவிப்பித்து க்ரு தார்த்தராக்க யத்நிக்கிறாரித் திருக்குறுந் தாண்டகத்தால்.

ப்ரதிபத அவதாரிகை

முற்றிற்று.

—*—

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

# திருக்குறுந்தாண்டகம்.

அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

## முதற்பாட்டு.

நிதியினைப்பவளத்தூணை நெறிமையால்நினையவல்லார் *
கதியினைக்கஞ்சன்மாளக் கண்டுமுன்னண்டமாளும் *
மதியினைமாலைவாழ்த்தி வணங்கியென்மனத்துவந்த *
விதியினைக்கண்டுகொண்ட தொண்டனேன்விடுகிலேனே.

### ப்ரதிபதம்.

| | |
|---|---|
| நிதியினை | (தொண்டர்களுக்கு) வைத்த மாநிதியாகியவனும் |
| பவளத்தூணை | (தாரகனும்ஸ்ப்ருஹணீயனு மாதலால், பவளத்தாலாகிய தூணாகியவனும் |
| நெறிமையால் | அடைவுபட (அல்லது) செவ்வையாக |
| நினையவல்லார் | தியானஞ் செய்யவல்ல தொண்டர்களுக்கு |
| கதியினை | தஞ்சமாகியவனும் |
| கஞ்சன் | கம்ஸனை |
| மாள | இறக்குமாறு |
| கண்டு | முன்னமேயறிந்து |
| முன் | துவாபரயுகத்தில் |
| அண்டம் | இவ்வுலகங்களை |
| ஆளும் | பாதுகாக்கவல்ல |
| மதியினை | ஞானமுடையவனுமாகியும் |
| என்மனத்துவந்த | அடியேன்மனத்தில்தோன்றிய |
| விதியினை | நியாமகனாகியவனும் ஆகிய |
| மாலை | ஸ்ரீமந்நாராயணனை |
| வாழ்த்தி | துதித்து |
| வணங்கி | சரணம்புக்கு |

| | |
|---|---|
| கண்டுகொண்ட | (நெடுநாளிழந்த பேரின்பத்தை அநு பவித்துணர்ந்த |
| தொண்டனேன் | அடிமைபூண்ட அடியேன் |
| விடுகிலேன் | (இனியொருக்காலும்) இழக்கேன் |

## வ்யாக்யாநம்.

(நிதியினை) இத்யாதி கிழிச்சீலையோடே தநத்தைக்காட்டிக் கொடுப்பாரைப்போலே, தன் ஸ்வரூபகுண விபூதிகளைத் திருமந்த்ர முகத்தாலே காட்டிக் கொடுக்கக்கண்டு தம்முடைய பூர்வ விருத்தத்தையும், பெற்ற பேற்றின் கநத்தையும், அநுசந்தித்துத் தலை சீக்கிறுர். பெரிய திருமொழியில் திருப் பிரிதிதுடங்கி ஒரு நற்சுற்றமளவும், உகந்தருளின தேசங்களை யநுபவித்தார். ஒரு நற்சுற்றத்துக்கு மேல் மாற்றமுளவாயுஞ் செல்ல அவதாரங்களிலே குணசேஷ்டிதங்களை யநுபவித்து ஸம்ஸார பரமபதவிபாக மின்றிக்கே, இவர் ப்ரஷ்டரா யிருக்கிறபடியைக்கண்டு ஸர்வேசுவரன் ஸம்ஸாரத்தி லிருக்கிறபடியை யறிவித்தால் த்வரித் திருந்தாராகில் கொடுபோகிறும். இல்லையாகில் கிரமத்தாலே கொடுபோகிறுமென்று ஸம்ஸாரத்திலிருக்கிற விருப்பை யறிவிக்க ஆற்றங்கரை வாழ்மரம்போ லென்றும், காற்றத் திடைப்பட்ட கலவாமனம்போ லென்றும், பாம்போ டொரு கூறையிலே பயின்றுற்போ லென்றும், இருபாடெரி கொள்ளியினுள்ளெறும்புபோ லென்றும், வெள்ளத் திடைப்பட்ட நரியினம்போ லென்றும், விடைய னெறிந்த மரமே யொத்திராமே என்றும், கூப்பிட்டதில் பெருவிடாயர் உடம்பிலும் முகத்திலும்நீரை ஏறிட்டுக் கொள்ளுமாப்போலே பேசி அநுபவித்து இதுதான் இனிதாய் இது எல்லாம் உகந்தருளின நிலங்களை அநு பவிக்கையால் வந்தது. உகந்தருளின நிலங் களிலே மண்டினவர்கள் பாக்கியாதிக ரென்று தலைக்கட்டுகிறுர்.

(நிதியினை) எய்ப்பினில் வைப்பாய் இந்நிதி யுடையவனுக்கு மிடிபட வேண்டா திருக்கையும், உடையவன் காலிலே எல்லோரும் வந்து விழுகையும், உண்டென்ன வுயர்நிற்கையும், ஆபத்துக்கு தவுகையும், உடையவன் பெருமதிப்பனுகையும், விற்றும் ஒத்திவைத்தும் ஜீவிக்கலாயிருக்கையும், இப்படி செய்த தென்று ஏசாதிருக்கையும், ஏவமாதிகுணங்

களைப் பற்றநிதியினை யென்கிறார்-வைத்தமாநிதியிறே (குஹாயாம், நிஹிதம்) என்று பேசப் படுகிறவஸ்து (நிதியினை) நாட்டிற்காண்கிற நிதிபோலல்ல, எல்லாத்துக்கும் மேலான நிதியாயிற்று இந்நிதி, இந்நிதி, புதைத்துவைத்தாளவேண்டா நெஞ்சிலே வைத்தாளலாம், ஓரிடத்திலே புதைத்துவைத்து தேசாந் தரத்திலே நிற்கச்செய்தே விநியோகங் கொள்ள வேண்டினால் உதவாது அந்நிதி, இந்நிதி, நினைத் தவிடத்தே விநியோகங் கொள்ளலாம், பறித்துக்கொள்வா ரில்லை, பறிக்கத் தானொண்ணாது, அந்நிதியுடையவனை அவஸரம் பார்த்துக்கொன்று பறித்துக்கொண்டு போவார்கள். இந்நிதியுடையவனுக்கு அப்படிப்பட்ட ப்ரமாத ஸம்பாவனைகளில்லை.

(பவளத்தூணை) எல்லாத்துக்கும் தான் தாரகமாயிருக்கும், அத்தைப் பற்றத்தூணென்கிறார், பவளத்தால் ஸ்ப்ருஹணீயதையைச் சொல்லுகிறது. தூணாவது தான்அநேகத்தைத் தரித்துத் தன்கீழே யொதுங்குவார்க்கு நிழல்கொடுத்து நிற்பதொன்றிறே அப்படியே தானெல்லார்க்கும் தாரகனாய்த் தன்னை யடைந்தார்க்கு நிழல் கொடுக்கையாலே தூணென்கிறார்.

(நெறிமையால் நினையவல்லார் கதியினை) "நினைதோறுஞ் சொல்லுந்தோறும் நெஞ்சிடிந்துகு மென்கிற" படியே அடைவுபட நினைக்க மாட்டார்களே யிவர்கள். ஆகையால் (நெறிமையால் நினையவல்லார்) என்கிறார், நினைக்கவல்லார்க்குநெற்றிகாக்கும் (கதியினை) நினைப்பார்க்கு பரமகதியாம் ப்ராபகனுமென்றபடி, பரவித் தொழுந் தொண்டர் தமக்குக் கதியே என்றக் கடவதிறே. நிதியினையென்று ப்ராப்யஞ் சொல்லிற்று. (கதியினை) என்று ப்ராபகஞ் சொல்லிற்று, நினையவல்லா ரென்கையாலே அதிகாரி விசேஷஞ் சொல்லிற்று, இப்படி உபாயோ பேயங்கள் தானேயா யிருக்கிறவனை, ஆர்க்கெங்கே யுதவக்கண்டோமென்னில்.

(கஞ்சன்மாளக்கண்டு) தந்தைகாலிற்பெருவிலங்கு தாளவிழவென்றும். தந்தைகாலில் விலங்கறவந்து தோன்றிய வென்றும், ஒருத்திமகனாய்ப் பிறந் தித்யாதிப்படியே தன்னைப் பிள்ளையாகப்பெற்றவர்கள் கால்கட்டறுத்து அவர்களை

வாழ்வித்தா னென்கிருர், (கஞ்சன் மாளக்கண்டு) கம்ச னுடைய ஆயுஸ்ஸு முடியும்படி பார்த்து.

(முன்) அவன்நினைவையவனுக்கு முன்னே செய்து முடிக்கை.

(அண்டமாளும்) ஜந்துஸாதனமாயிற்று (அண்டமாளும்) "ராமோராஜ்யமுபாஸித்வா" (రామోరాజ్యముపాసిత్వా) என்னுமாப்போலே நாட்டை யீரக்கையாலே தடவி கம்ஸன் காலத்திற்பட்ட நோவுதீர ரக்ஷித்து.

(மதியினை) கம்ஸனைக் கொன்று நாட்டுக்குக் களைபிடுங் கினபின்பும், ஆச்சி யுமையரும் என் செய்தார்க ளென்று "ருணம்ப்ரவ்ருத்தமிவமே" (ఋణంప్రవృద్ధమివమే) என்று படுகிற (மதியினை) நம்மதிகேட்டைநினைத்து அஞ்சவேண்டா "அஹம்ஸ்மராமி" (అహంస్మరామి) என்று தான் இவ் விழவுதீர நினைக்கும்.

(மாலை) மாலாய்ப் பிறந்த நம்பியிறே, ஆஶ்ராலேஶ முடையவர் பக்கல் முக்த்தனா யிருக்கு மவனை. (வாழ்த்தி வணங்கி) வாய்படைத்த ப்ரயோஜநம்பெற அவன் திருவடி களிலே வணங்கி.

(என்மனத்துவந்த விதியினை) "மனம்புகுந்தாய் புகுந் ததற்பின் வணங்கும்" என்கிறபடியே ஆஶ்ராலேசமு மின் றிக்கே யிருக்கக்கிடைக்கப் பாயிலே வெள்ளங் கோத்தாற் போலே (என்மனத்துவந்தி) ஈழங் குகனைக் காண்பா ரில்லை யிறே, எல்லா வவஸ்தை யிலும் வருவானிறே, அதுக்கடி (விதியினை) அவனிஸ்வாதந்த்ரியத்தாலும் என்கருமத்தாலுந் தவிரவொண்ணாத கிருபை, விதிவாய்க்கின்று காப்பாரார் விதி சூழ்ந்ததால் இவ்வளவான பேற்றுக்கடியான தம்மு டைய ஸுக்ருதத்தைச் சொல்லுகிருர்.

(கண்டுகொண்ட தொண்டனேன் விடுகிலேனே) சுவ டறிவிக்குந் தனையுமிறே வருத்தமுள்ளது, பின்னை யித்தலை யித்தலையாமித்தனை, (கண்டுகொண்ட) நான் கண்டுகொண்டே னென்று, அரசடியிலே காட்டிக்கொடுத்த காட்சி, ஏதுசெய் தால் மறக்கேனென்று மறந்தும் விடவொண்ணாத படியிறே மனஸில்புகுந்து காட்டிக் கொடுத்தது (கண்டு கொண்ட)

கேட்டது கண்டாற் போலே யிருக்கிறது காணும் ஸ்வரூப ஜ்ஞானம் பிறந்தவ ராகையாலே "பண்டேயுண்டாய்" இழந்து கண்டாற்போலே யிருக்கிற அவன்மால் நான் றேண்டன், இனிவிட வுபாயமுண்டே? அவனுக்கு என்பக்கல் ஸ்நேஹமில்லை என்னவொண்ணாது நானதிலீடுபட்டிலே னென்ன வொண்ணாது, ஆனபின்பு எத்தைச் சொல்லி விடுவது. (க)

## இரண்டாம்பாட்டு.

காற்றினைப்புனலைத்தீயைக் கடிமதிளிலங்கைசெற்ற *
ஏற்றினையிமயமேய வெழின்மணித்திரளையின்ப *
ஆற்றினையமுதந்தன்னை யவுணனாருயிரையுண்ட *
கூற்றினைக்குணங்கொண்டுள்ளம் கூறுநீகூறுமாறே. *

### ப்ரதிபதம்.

| | |
|---|---|
| காற்றினை | வாயுவாகியவனும் |
| புனலை | அப்பாகியவனும் |
| தீயை | அக்நியாகியவனும் |
| கடி | அரணுகப்பெற்ற |
| மதிள் | மதிளையுடைய |
| இலங்கை | இலங்காநகரை |
| செற்ற | வெற்றிகொண்ட |
| ஏற்றினை | புகழுடையவனாகியும் |
| இமயம் | பொன்னை |
| ஏய | ஒத்த |
| எழில் | அழகினையுடைய |
| மணித்திரளை | மணிகளின் குவையாகியவனும் |
| இன்பவாற்றினை | ஆநந்த ப்ரவாஹரூபியாகியவனும் |
| அவுணன் | ஹிரண்யகசபுவினது |
| ஆர் | நிறைந்த |
| உயிரை | பிராணனை |
| உண்ட | (இரத்தத்துடன்) பானஞ்செய்த |
| கூற்றினை | இயமனாகியவனும்ஆகிய |
| அமுதந்தன்னை | ஆராவமுதனை |
| குணங்கொண்டு | குணங்களை யகத்திற்கொண்டு |
| உள்ளம் | மனனே |
| கூறுமாறு | (எப்பொழுதும்) கூறும்படியே |
| நீகூறு | நீ புகழ்ந்துரைசெய் |

## வ்யாக்யாநம்.

(காற்றினை) இத்யாதி "திஸ்ரோதேவதா:" (த்ரீ தேவதா:) என்றபடியே பூதங்களைந்துக்கும், உப லக்ஷண மாய்க் காரணமே அவஸ்தாந்த ராபந்ந மானது காரியம் என்னு மத்தாலே ஜகச்சரீரனானவனை என்கை.

(கடிமதிளிலங்கை செற்றவேற்றினை) கடி அரண், அரணாகப் பொருந்தும்படி யானமதிள், "லங்காம்ராவண பாலிதாம்" (லங்காம்ராவணபாலிதாம்) என்கிறபடியே மதிளின்றியிலே யிருந்தாலும் ப்ரவேசிக்க வொண்ணாத வூர், அதுக்குமேலே ராவணனும் "பரிகரமும் பல்கிப் படர்ந்து கிளர்ந்து கிடக்கிற லங்கையைப் பாழாளாகப் படைபொருதான்" என்கிறபடியே லங்கை அடைய வூர் பாழாம் படிச் செற்று அத்தால்வந்த மேனாணிப்பாலே செருக்கியிருக்கிறவனை,—

(இமயமேய வெழின்மணித் திரளை) இமயம் - பொன், ஏய்கை-ஒக்கை, ஆஸ்ரிதவிரோதியான ராவணனைக் கொன்றபடியாலே செருக்கிப் பொன்போலேபுகர்த்து நல்ல மணித் திரள்போலே போக்ய னானவனை (இமய) இத்யாதிக்கு அவதாரத்துக்குப் பிற்பட்டாருக்கு அநு பவிக்கும்படி, ஹிமவானிலே பொரிந்தி யிருக்கிறபடி என்று நிர்வஹித் தார்கள். ஏலநாறு தண்டடம் பொழிவிடம் பெற விருந்த நல்லிமயமிறே.

(இன்பவாற்றினை) மதுரவாறிறே "ஆநந்தம்ப்ரஹ்மண:" (ஆநந்தம்ப்ரஹ்மண:) என்கிற ஆநந்த ப்ரவாஹமிறே, ஆறென்கையாலே விடாய்த்தாருக்குப் புக்கு முழுகலா யிருக்கையும், வேண்டினவிடத்தே திறந்து பாய்ச்சி விளைவித்துக் கொள்ளலா யிருக்கையும், இவ்வாறு விளைவிப்பது பேரமர் காதல் கடல் புரைய விளைவிறே.

(அமுதந்தன்னை) போனவுயிரை மீட்கவற்றாய் போக்யமுமாயிருக்கை (இளைப்பாற்றினை யமுதந்தன்னை) விளைப்பானுந் தானாய் விளைந்தால் புஜிக்கும் போகமுந் தானாயிருக்கை, "அம்ருதம்த்ருஷ்ட்வாத்ருப்தி" (அம்ருதம்த்ருஷ்ட்வாத்ருப்தி)

இறே, கண்கொண்டு புஜிக்கலாய், அம்ருதமிறே - இப்படி ப்ராப்யப்ராபகங்க ளிரண்டுந் தானொப்பினால் இவ்வம்ருதபானம் பண்ணுபவர்க்கு வரும் விரோதி போக்குவார், ஆரென்னில் ?

(அவுணனுருபி ருண்டகூற்றினை) ப்ரஹ்லாதன் விரோதியான ஹிரண்ணியன் பட்டது படுமெனகிறார், (கூற்றினை) "ம்ருத்யும்ருத்யும்" (ம்ருத்யோர்ம்ருத்யும்) என்கிற மந்திரலிங்கத்தை நினைக்கிறார்.

(குணங்கொண் டுள்ளம்) நெஞ்சிலே குணங் களைக் கொண்டு.

(உள்ளங்கூறுநீ கூறுமாறே) உள்ளமானது எப்போதோ வென்றிருக்க நீ கூறும்படியே கூறு, வேண்டினபடியே என்கிறார். (௨)

## மூன்றாம் பாட்டு.

பாயிரும்பரவைதன்னுட் பருவரைதிரித்துவானோர்க் *
காயிருந்தமுதங்கொண்ட வப்பனையெம்பிரானை *
வேயிருஞ்சோலைசூழ்ந்து விரிகதிரிரியநின்ற *
மாயிருஞ்சோலைமேய மைந்தனைவணங்கினேனே. *

### ப்ரதிபதம்.

| | |
|---|---|
| பாயிரும் | பரவியும் ஆழ்ந்துமுள்ள |
| பரவைதன்னுள் | திருப்பாற்கடலினிடையில் |
| பருவரை | பருத்தமந்தரமலையை [து |
| திரித்து | (துரும்பைப்போல) கைகளால் திரித் |
| வானோர்க்காயிருந்து | தேவர்களுக்காக முன்னின்று |
| அமுதம் | அமிர்தத்தை |
| கொண்ட | அஸுரர்க ளிடத்திருந் தபஹரித்துக் கொண்டளித்த |
| அப்பனை | உபகாரனாகிவனும் |
| வேய் | மூங்கில்கள் |
| எம் | எமக்கு |
| இரும் | நெருங்கிய |

| | |
|---|---|
| பிரானை | ரக்ஷகனாகியவனும் |
| சோலை | தோப்புக்களால் |
| சூழ்ந்து | அடரப்பெற்று |
| விரிகதிர் | விரிந்தகிரணங்களுடைய சூரியனும் |
| இரியநின்ற | அகலும்படிநின்ற |
| மாயிருஞ்சோலை | திருமாலிருஞ் சோலையென்னுந் திருமலையில் |
| மேய | நித்யவர்ஸஞ்செய் தருளிய |
| மைந்தனை | வலிபொருந்திய நந்தகுமாரனை |
| வணங்கினேன் | சரணமடைந்தேன் |

## வ்யாக்யாநம்.

(பாயிரும்) சொன்ன வணக்கத்தைச் சொல்லுகிறார், (பாயிரும்) இத்யாதி, பாயென்று பரப்பு, இருமை-பெருமை, இவை யிரண்டாலும், ஆழத்தையும் அகலத்தையுஞ் சொன்னபடி.

(பருவரைதிரித்து) கடலைக் கண்செறி யிட்டாற்போலே பெரிய மந்தர பர்வதத்தை யிட்டு அம்ருதங் கிளரு மளவும் தானே திரியும்படியாய் வைத்த நோய்ப்பம்.

வானோர்க்காயிருந் தமுதங்கொண்ட வப்பனை தனக்கா இருப்பார் அதமரிறே, நிலாத்தென்றல் சந்தனம் தணணீர் போலே தன்னை பரார்த்தமாக்கி வைக்கு மவனிறே, போது நின்ற பொன்னங்கழ லென்றும், "ஸர்வலோகசரண்யாய" (ஸர்வலோகசரண்யாய) என்றுஞ் சொல்லு கிறபடியே எல்லார்க்குந் தன்னைப் பொது வாக்கியிறே வைப்பது, ஆசையில்லாதார் இழந்துவிடு மித்தனை, (அப்பனை) உபகாரகனை, ப்ரயோஜனாந்தர பரரான அந்தர ஜாதிகளுக் காகத் தன்னை யழியமாறி அநேகம் வடிவு கொண்டு உபகரிக்குமவனை.

(எம்பிரானை) தம்முடைய அம்ருதம்.

(வேயிரும்) இத்யாதி, மூங்கில் குழாங்களாலே சூழ்ந்து விஸ்த்ருத கிரணனான ஆதித்தியன் திருமலை யாழ்வார்மேலே தன் சாயை படாமே அகல ஸஞ்சரிக்கிற,

(மாயிருஞ் சோலைமேய) திருமாலிருஞ் சோலை என்கிற திருநாமத்தையுடைய திருமலையிலே பொருந்தி யிருக்கிற.

(மைந்தனை வணங்கினேனே) தம்மை யடிமைகொண்ட பருவம் இவரை யடிமைகொள்வதாகத் திருமலையிலே எழுந்தருளி நின்றபின்பு வடிவு இளகிப்பதித்தபடி, அப்பனை என்று கீழே யொரு உடமைசொல்லி இப்போது மைந்தனை என்கிறாரிறே. (ஙு)

## நான்காம்பாட்டு.

கேட்கயானுற்றதுண்டு கேழலாயுலகங்கொண்ட *
பூக்கெழுவண்ணனாைப் போதரக்கனவிற்கண்டு *
வாக்கினாற்கருமந்தன்னால் மனத்தினாற்சிரத்தைதன்னால்
வேட்கைமீதூரவாங்கி விழுங்கினேற்கினியவாறே. *

### ப்ரதிபதம்.

| | |
|---|---|
| வாக்கினால் | வாக்கினாலும் |
| கருமந்தன்னால் | காயத்தினாலும் |
| மனத்தினால் | மனத்தாலும் |
| சிரத்தைதன்னால் | ஆதரங்கொண்டு |
| வேட்கை | ஆசை |
| மீதூர | பூர்த்தியாகும்படி |
| வாங்கி | அங்கீகரித்து |
| விழுங்கினேற்கு | (பற்பலவிஷயங்களையும்) அநுபவித்த அடியேனுக்கு (அவ்விஷயங்கள்) |
| இனியவாறு | உகட்டாம லினிதாகிய வழியை |
| கேழலாய் | வராஹாவதாரஞ்செய்து |
| உலகம் | பூமிதன்னை |
| கொண்ட | (கடலில் மங்காமல்) தன் திருக்கோட்டின்மே லெடுத்துக்கொண்ட |
| பூக்கெழு | நறுமலர்போல் சுகுமாரராகிய |
| வண்ணனாை | திருவுருவங்கொண்ட அழகனை |
| கனவில் | ஸ்வப்நாவஸ்தையில் |
| போதரக்கண்டு | புலன்களின் முகத்தாலன்றி நேராகக் கண்டு |

| | |
|---|---|
| யான் | அடியேன் |
| கேட்க | வினவும்படி |
| உற்றதுண்டு | அபிநிவேசங் கொண்டதுண்டு |

உடைமை மங்காமைக்காக ஏனமாய்ப் பாரொடுத் தளித்த தேவர் அடியேனையும் இவ்விஷயங்களில் வீழ்ந்துழலா வண்ண மெடுத்தளித் தருள வேண்டுமென்று ஆழ்வார் திருவுள்ளம்.

## வ்யாக்யாநம்.

(கேட்க) இத்யாதி, அடியேன் தேவரீரை யொன்றுகேட்கவுற்றேன், அத்தை யருளிச் செய்யவேணும், அதென்னென்பதென்ன ?

(கேழலா யுலகங்கொண்ட) இத்யாதி, புஷ்பஹாஸஸுகுமாரமான வடிவை மானமிலாப்பன்றியாக்கி நிலங்கோட்டிடைக்கொண்டது, இந்தக்கழஞ்சு மண்ணுமிழந்தால் பின்பு ஸ்ருஷ்டிக்க அரிதாய்ச் செய்தருளிற்றோ இதை எனக்கு அருளிச் செய்யவேணும் ப்ரளயங்கொண்ட பூமிதன்னை எடுக்கலிறே இவனுக்கு உத்தரஞ் சொல்லுவது.

(போதரக் கனவிற்கண்டு) மிகவும் நெஞ்சிலே கண்டு இந்திரியங்களால் வ்யவச் சேதமின்றிக்கே அவ் யவதாநே நவிசத தமமாகக் கண்டு.

(வாக்கினால்) இத்யாதி, மநோவாக் காயங்களாலும் ஶரத்தையாலும் மிக்க அபிநிவேசத்தை யுடையேனாய் விழுங்கினேனுக் கினிதாயிருந்து விழுங்குகை அநுபவிக்கை, எவ்விஷயங்கள் அநுபவித்து ரஸித்துப் போந்த வெனக்கு எவ்விஷயம் ரஸிக்கிறது.

(விழுங்கினேற் கினியவாறே) எனக் கினிதான வழிஎன்தான், எவ்வழியாலும் உகட்டிப் போந்த விஷயம் எவ்வழியாலே இனிதாயிற்று. இது இனிதானவழியை யருளிச்செய்ய வேண்டும் இதுக் கவன் என்ன வுத்தரஞ் சொல்லுவது, ப்ரள

யங்கொண்ட பூமியை எடுத்தது உடமை மங்காமைக்கன்றே அவ்வோபாதிமங்க வொண்ணுதென்று ஸம்ஸார ப்ரளயத்தில் நின்றும் இவனை எடுத்தானித்தனையிறே. (ச)

## ஐந்தாம்பாட்டு.

இரும்புநன் றுண்டநீர்போ லெம்பெருமானுக்கென்றன் ❊
அரும்பெறலன்புபுக்கிட் டடிமைபூண்டுய்ந்துபோனேன்
வரும்புயல்வண்ணனை மருவியென்மனத்துவைத்துக்
கரும்பினின்சாறுபோலப் பருகினேற்கினியவாறே. ❊

### ப்ரதிபதம்.

| | |
|---|---|
| இரும்பு | (நன்ருகக் காய்ச்சப்பட்ட) இரும்பினல் |
| நன்றுண்ட | நன்ருக உண்ணப்பட்ட |
| நீர்போல் | ஜலம்போல் |
| எம்பெருமானுக்கு | எமக்குவகுத்த சேஷிக்கு |
| பெறலரும் | பெறுவதற்கு அரிய |
| என்றன் | என்னுடைய |
| அன்பு | ஆசாரஸத்தை |
| புக்கிட்டு | அவன்பக்கலிலே யாக்கி |
| அடிமைபூண்டு | கைங்கரியங்களை போக்யமாகக் கொண்டு |
| உய்ந்துபோனேன் | உஜ்ஜீவித்துப் பல திருப்பதிகளிலும் ஸஞ்சரித்தேன் |
| வரும்புயல்வண்ணனை | எதிர் பார்ப்போரிடஞ்சென்று விடாயாற்றும் கருமுகில்போன்ற திருமேனியுடைய சுந்தரராஜனை |
| மருவி | என்னையும் மறந்துகிட்டி |
| என்மனத்துவைத்து | என்னுள்ளத்தில் தியானித்து |
| கரும்பினின்சாறுபோல | கரும்பினது இனியரஸம்போல |
| பருகினேற்கு | (உருசிகொண்டு) அநுபவித்த அடியேனுக்கு, |
| இனியவாறே | (இதுவுமோர்) இனிதாகியநல்வழியே |

## வ்யாக்யாநம்.

(இரும்புநன் றுண்டநீர்போல்) இத்யாதி, இரும்பானது அக்கினியாலே மிகவும் தப்தமாய் அக்காய்ச்ச லடங்கப் பானம் பண்ணப்பட்ட ஜலம்போலே.

(எம்பெருமானுக்கு) வகுத்தசேஷிக்கு.

(என்றனரும்பெறலன்பு) அரும்பெற லடிகளைப் பெறி லும் கிடையாத வன்பு, எனக்கு பகவத்விஷயத்திலே அன்பு பிறக்கையாவது இந்தளத்தே தாமரை பூக்கையிறே, அஹங் கார மஹாவஹ்நியிறே.

(புக்கிட்டு) அன்பை யவன்பக்கலிலே யாக்கி.

(அடிமைபூண்டு) "அஹம்ஸர்வங்கரிஷ்யாமி" (அஹம் సర్వంకరిష్యామి) என்கிறபடியே வழுவிலாவடிமையிலே அந் வயித்து.

(அடிமைபூண்டு) சொண்டுபூண் டென்னுமாப்போலே இவ்வாத்மாவுக்குஆபரணமிறே, பகவத்தாஸ்யம், ஆகையாலே பூண்டென்கிறார்.

(உய்ந்துபோனேன்) முன்பு அஸந்நேவவிறே.

(வரும்புயல் வண்ணனாை) இருந்தவிடத்தே யிருந்து விடாய்கொடுக்கும் மேகமன்று, கடலைமணலோடேகழுத்தே கட்டளையாகப்பருகித் தவழ்ந்துவருகிறமேகம்போலேயிருக் கவரும்.

(மருவி) மைத்தெழுந்து மாமுகிலே பார்த்திருக்கு மற் றவைபோல.

(புயல்வண்ணனாைமருவி) என்னைமறந்துகிட்டி.

(என்மனத்துவைத்து) ஸஞ்சாரம் அற்றபடி, உத்தேஶ் யம் கைபுகுந்தாலுண்டோ ஸஞ்சாரம்.

(கரும்பினின் சாறுபோலப் பருகினேற்கு) விழுங்குகை போய்ப் பருகலாம்படி யாயிற்று, ஆழ்வாருடனே கலக்கக் கலக்கப் பருகலாம்படி யொரு நீராளுன்.

(இனியவாறே) இதுவுமோ ரினிமையேதான், இதொரு இனிமைபிருந்தபடியென். (ரு)

## ஆறும்பாட்டு.

மூவரின்முதல்வனாய வொருவனையுலகங்கொண்டக், கோவினைக் குடந்தைமேய குருமணித் திரளையின்பப், பாவினைப்பச்சைத்தேனைப் பைம்பொன்னையமரர்சென்னிப், பூவினைப்புகழுந்தொண்ட ரென்சொல்லிப்புகழ்வார்தாமே.

ப்ரதிபதம்.

| | |
|---|---|
| மூவரில் | அயனரனிந்திரர்களுக்கும் |
| ஒருவனாய | காரணமாகிய |
| ஒருவனை | ஒப்பாரு மிக்காரு மில்லாதானாகியவனும் |
| உலகங்கொண்ட | (மூவடியாக) மூவுலகங்களையுமளந்து கொண்ட |
| கோவினை | ஸர்வஶக்தனாகியவனும் |
| இன்பப்பாவினை | இனிய பாசுரம்போல் செவிக்கினியவனாகியவனும் |
| பச்சைத்தேனை | புதியதேன்போல் நாவுக்கினியவனாகியவனும் |
| பைம்பொன்னை | பசும்பொன்போல் விருப்புறத்தக்கவனாகியவனும் |
| அமரர்சென்னிப்பூவினை | நித்யஸூரிகளின் சிரோபூஷணமாகியவனும் |
| குடந்தைமேய | திருக்குடந்தையிலெழுந்தருளிய |
| குருமணித்திரளை | நீலமணித் திரள்போன்ற திருமேனியுடையவனு மாகிய ஆராவமுதனை |
| புகழும் | புகழும்படி நின்ற |
| தொண்டர் | பக்தர்கள் |
| தாமே | தாங்களே |
| என்சொல்லி | என்னபடியுரைத்து |
| புகழ்வர் | புகழ்வர்கள். |

பரமயோகிகளாலும் மனஸாபரிச்சேத்யஸ்வரூபனான பரஞ்சோதியை யென்சொல்லிப் புகழ்வார்கள், யாராலும் அறிய

வொண்ணுதென்று புகழுமதொழிய, இத்தன்மைத்தென்று பாசுரமிட்டுப் புகழப்போமோ புகழவொண்ணுதென்று திருவுள்ளம்.

## வ்யாக்யாநம்.

(மூவர் இத்யாதி) இந்த்ரனைக் கூட்டுதல் தன்னைக் கூட்டுதல் "ஸஸம்ஜ்ஞாம்யாதிபகவாந் ஏகஏவஜநார்த்தந:" ( ససంజ్ఞాంయాతిభగవాన్ ఏకఏవజనార్దనః ) என்னும்படியே மூவருக்கும் காரணமாகையாலே முதல்வனென்கிருர். மூவுருவங்கொண்டபோ தொன்ருஞ்சோதியென்கிறபடியே மூவரையும் தனித்தனியே கண்டால் இவனே காரணபூதன், இவனே காரணபூதனென்னலாய், மூவரையுஞ் சேரக்கண்டால் இருவர் கார்யகோடி நிவிஷ்டராய், இவனே காரணம், இருவருக்குமென்னும்படி பரஞ்சோதிஶ் ஶப்தவாச்ய னிவனேயாயிருக்கையாலே அஞ்ஜோதி யொன்றென்கிருர்.

( உலகங்கொண்டகோவினை ) மூவருக்கும் ப்ரதானனுனல் அவர்கள் காரியஞ்செய்துகொடுக்கவேணுமே, அவர்களிலே யொருவனுக்குக் காரியஞ் செய்தபடி.

(உலகங்கொண்ட) இந்த்ரனுடைய ராஜ்யத்தைப் பறித்துக்கொள்ள மஹாபலி அவன்பக்கலிலே தானே சென்று அபேட்சித்து மூவடியென்று இந்த்ரன் காரியஞ்செய்ய முதலடியிட்டபடி, முன்பே யொருவனுக்குக் கையோட்டைத்தீர்த்துவிட்டான், முடையடர்த்த சிரமேந்தி மூவுலகம் பலிதிரிவோன், இடர்கெடுத்த திருவாளனிறே, அவன் தமப்பனுக்குத்தானே வேதப்ரதானம்பண்ணினுன். இப்படி செய்கைக்கு ஹேதுவென்னென்னில்.

(கோவினை) நிர்வாஹகனுகையாலே.

(குடந்தைமேய) இன்னும் ஸம்ஸாரிக ளிடர்ப்பட்டாருண்டாகிலும் கைகழியப் போகவொண்ணுதென்று திருக்குடந்தையிலே படுக்கைப் பொருந்திப் பள்ளிகொண்டவனை.

(குருமணித்திரளை) சிரேஷ்டமான நீலரத்நஸமூஹம் போலே புகர்த்துக் குளிர்ந்த வடிவழகையுடையவனை.

(இன்பப்பாவினை) செவிக்குத் தம்முடைய கவிபோலே இத்தித்திருக்கிறபடி பாவென்பது இயல்பாட்டு, இன்கவிபா டும் பரமகவிகளான முதலாழ்வார்கள்கவிபோலே இனியனு யுள்ளவனை யென்னவுமாம்.

(பச்சைத்தேனை) செவிக்கே யன்றிக்கே நாக்குக்கும் இருக்கிறபடி.

(பைம்பொன்னை) உடம்புக்கு அணையலாம்படி ஸ்ப்ரு ஹணீயமா யிருக்கை,

( அமரர்சென்னிப்பூவினை ) அயர்வறு மமரர் களுக்கு ஸிரோபூஷணமான அரும்பினை, மலராப் பாத பற்பத்தலை சேர்த்தென்ன வேண்டா அவர்களுக்கு,

(புகழுந்தொண்டர்) இவ்விஷயத்தைப் புகழ்ந்தார்களா கக் கொண்டோம், இதுக்குப் பாசுர மெங்கே தேடிச்சொன் னார்கள், கிண்ணகத்திலே புக்குமுழுகுவாரைப்போலே குமி ழிநீருண்டு போமித்தனை போக்கி,

(என்சொல்லிப் புகழ்வார்தாமே) அரும்பொரு ளாத லறிந்தனரொன்று அறிய வொண்ணாதென்று புகழுமதொழி யப் பாசுரமிட்டுப் புகழப் போகாது. (சு)

## ஏழாம்பாட்டு.

இம்மையேமறுமைதன்னை யெமக்குவீடாகிநின்ற ※
மெய்ம்மையைவிரிந்தசோலை வியன்திருவரங்கமேய ※
செம்மையைக்கருமைதன்னைத் திருமலையொருமையானை
தன்மையைநினைவாரென்தன் றலைமிசைமன்னுவாரே ※

ப்ரதிபதம்.

| | |
|---|---|
| இம்மையே மறுமைத ன்னை | புக்தி முக்திகளைத் தருமவ னாகியவனும் |
| எமக்கு வீடாகிநின்ற மெய்ம்மையை | நமக்கு மோக்ஷாநந்தமுமாகி புண் மையாகியவனும் |
| விரிந்தசோலை | படர்ந்துயர்ந்த சோலைகளையுடைய |
| திருவரங்கம் | கோயிலிலே |

| | |
|---|---|
| மேய | நித்யவாஸஞ் செய்தருளிய |
| செம்மை யைக் கருமைதன்னை | யுகங்கள்தோறும் செம்மை கருமை முதலியரூபங்களைக்கொண்டு தொண்டரை யுகப்பித்தருளும் திருமேனி யுடையவனுமாகிய |
| திருமலை | திருமலையில் |
| ஒருமையான | மண்ணோர்விண்ணோர்க்கும் ஒருமைப்பட இன்பந்நந் தருளத்தக்க |
| தன்மையை | இயல்பினையுடைய ஸ்ரீனிவாஸனை |
| நினையவல்லார் | தியானஞ் செய்யவல்ல பாகவதர்கள் |
| என்தலைமிசை | அடியேனுடைய சென்னிமேல் |
| மன்னுவாரே | ஸஞ்சரிப்பார்களே |

## வ்யாக்யாநம்.

(இம்மையை இத்யாதி) ஸர்வேச்வர னுடைய ஆச்ரித பாரதந்த்ர்யத்தை அநுஸந்திக்க வல்லர்க்கு ஸஞ்சார பூமி என் உத்தமாங்க மென்கிறார்.

(இம்மையை) இஹலோகத்தில் ஸ்வவிஷயஞ்ஜானத்தைத்தருமவனை.

(மறுமைதன்னை) ஸ்ரீரஸமநந்தரம் ஸ்வரூபாநுரூபமான கைங்கர்யத்தைத் தருமவனை, ஸம்ஸாரத்தில் துஃகநிவ்ருத்தியேஸுகமென்று ப்ரமமேயிறே,

(எமக்குவீடாகிநின்ற மெய்ம்மையை) நமக்கு மோக்ஷஸுகமா யுள்ளவனை, கீழ்ச்சொன்ன ப்ராப்யத்துக்கு அவ்யவஹிதமான வுபாயமானவனை.

( விரிந்தசோலை இத்யாதி ) அவ்வுபாயம் ஸுலபமான விடத்தைப் பேசுகிறார் பரந்த சோலையை யுடைத்தாய் விஸ்மயநீயமா யிருந்துள்ள கோயிலிலே நித்யவாஸம் பண்ணுமவனை.

(செம்மையைக் கருமைதன்னை) யுகந்தோறும் அவ்வவ்யுகங்களி லுள்ளாருகக்கும் வடிவுகளைக் கொண்டு அவர்களை ரக்ஷிக்குமவனை, முன்னை வண்ண மித்யாதிப் படியே செம்மையும் கருமையும் மற்ற விரண்டுக்கு முபலக்ஷணம்.

(திருமலை யொருமையானை) கண்ணவானென்றும் மண்ணோர் விண்ணோர்க் கென்கிறபடியே திருமலையிலே நின்று நித்ய ஸூரிகளுக்கும் நித்ய ஸம்ஸாரிகளுக்கும் ஒக்கமுகம் கொடுக்குமவனை.

(தன்மையை நினைவார்) இந்த ஆஶ்ரித பரதந்த்ரத்தை நினைக்கவல்லார்.

(என்றலைமிசை மன்னுவாரே) அவன் திருவடிகளுமிவர்கள் திருவடிகளும் ஒக்கவன்று மன்னுவது இவர்கள் திருவடிகளே என்தலையில் மன்னுவது தண்சேறை எம்பெருமான் தாள்தொழுவார் காண்மின் என் தலைமேலா ரென்கிறார். (எ

## எட்டாம்பாட்டு.

வானிடைப்புயலைமாலை வரையிடைப்பிரசமீன்ற ❋
தேனிடைக்கரும்பின்சாற்றைத் திருவினைமருவிவாழா ❋
மானிடப்பிறவியந்தோ மதித்தலர்கொள்கதந்தம் ❋
ஊனிடைக்குரம்பைவாழ்க்கைக் குறுதியேவேண்டினாரே

ப்ரதிபதம்.

| | |
|---|---|
| வானிடை | ஆகாசத்தின்மீது |
| புயலை | கருமுகில்போன்றவனாகியவனும் |
| வரையிடை | மலையிடையில் |
| பிரசம் | தேனீக்கள் |
| ஈன்ற | கட்டிய |
| தேன் | மதுவின் |
| இடை | நடுவில்வளர்ந்த |
| கரும்பின் | கரும்பினது |
| சாற்றை | சாறுபோன்றவனாகியவனும் |
| திருவினை | திருவுக்கும் திருவாகியும் எழுந்தருளியிருக்கும் |
| மாலை | ஸ்ரீமந்நாராயணனை |
| மருவி | ஆஶ்ரயித்து |
| வாழா | உஜ்ஜீவிக்காத இவர்கள் |

| | |
|---|---|
| மானிடப்பிறவி | நற்பேறுபெறத்தக்க இம்மானிடஜன் மத்தை |
| அந்தோ | அய்யோ |
| மதிக்கலா | மதிக்காமல் உதாஸீனஞ் செய்கிறார் களே |
| தந்தம் | தங்கள் தங்களது |
| ஊனுடை | மாம்ஸங்களையுடைய |
| குரம்பை | நீரிற் குமிழிபோன்ற இந்த சரீரத்தி னுடைய |
| வாட்கைக்கு | விளங்குகைக்கு |
| உறுதியே | அழியாமையே |
| வேண்டினார் | விருப்புற்றார்கள் |
| கொள்க | என்று நிச்சயங்கொண்மின் |

## வ்யாக்யாநம்.

(வானிடைப்புயலை) இவ்விஷயம் ஸந்நிஹிதமா யிருக்க தேஹத்தைப் பூண்கட்டிக் கொள்வதே ஸம்ஸாரிக ளென்கி றார். (வான்இத்யாதி,) ஆகாஶமத்யே நீர் கொண்டெழுந்து வந்து தோற்றுகிற மேகம்போன்ற வடிவழகை யுடையவனை (வானிடைப்புயல்) என் கையாலே நிராலம்பனா யிருக்கிற வென்னை நிர்ஹேதுகமாக வந்து விஷயீ கரித்தவனை யென்கி றார்.

(மாலை) அதுக் கடியான வ்யாமோஹம்.

(வரையிடை) இத்யாதி, மலையிலே தேனீக்களாலே உத் பாதிக்கப்பட்ட தேனை நீராக வளர்ந்த கரும்பின் சாறு போலே போக்யனானவனை.

(திருவினை) உத்க்ருஷ்டமாய் நிரவதிகமான ரஸவஸ்து வுக்குப் பெரிதுபோலே உத்க்ருஷ்ட வஸ்துவுக்கும், உத்க்ரு ஷ்ட வஸ்துவிறே, திருவுக்குந்திருவாகிய "ஶ்ரிய:ஶ்ரீ:" (ஶ்ரிய:ஶ்ரீ:) என்னும்படியே.

(திருவினை மருவிவாழா) வாழுகைக்கு நேற்றியவன் மேல் விழவிலக்கா தொழிகை, உங்களுக்கு நான் வேணு மென்ன எங்களுக்கு நீ வேண்டா வென்று மிவர்கள்.

(மானிடப்பிறவி) புருஷார்த்தோப யோகியான ஶரீரத்தை உதாஸீநிப்பதேஅன்றிக்கே இச்சரீரத்தில் தோஷத்தை யுணராதொழிவதே, என்னவுமாம், இத்தை தேவ சரீரமாக நினைத்திருப்பார்க ளென்னவுமாம்.

(அந்தோ) ஐயோ ? வென்றிவர்க ளிழவுக்கு வெறுக்கிறார்.

(கொள்க) நிச்சிதம்

(தந்தம்) இத்யாதி, த்ருடமின்றியே யப்போது போயிற்று, இப்போதுயிற்று, என்றும் மின்னின்னிலே யுற்றிருக்கிற இச்சரீரத்துக்குப் பூண்கட்டவே தேடுவர்கள். (அ)

## ஒன்பதாம்பாட்டு,

உள்ளமோவொன்றிநில்லா தோசையிலெரிநின்றுண்ணும், கொள்ளிமேலெறும்புபோலக் குழையுமாலென்றனுள்ளம், தெள்ளியீர்தேவர்க்கெல்லாந் தேவராயுலகங்கொண்ட, ஒள்ளியீரும்மையல்லா லெழுமையுந்துணையிலோமே.

ப்ரதிபதம்.

| | |
|---|---|
| உள்ளமோ | மனமோவென்றால் |
| ஒன்றிநில்லாது | ஓரிடத்திலும் நிலைத்திராது |
| ஓசையில் | தொனிகொண்டு |
| எரிநின்று | தீநிலைத்து |
| உண்ணும் | எரிக்கும் |
| கொள்ளிமேல் | கொள்ளிக்கட்டையின்மே லலையும் |
| எறும்புபோல | எறும்பானது போல |
| குழையுமால் | பிறப்பிறப்பினிடையி லடிபட்டு வருந்தி யலையுமாதலின் |
| என்றனுள்ளந் தெள்ளியீர் | அடியேன் உள்ளத்தை யவ்வாறு அலையாவண்ணந் தெளிவித்த தெளிவுடைய எம்பிரானே. |
| தேவர்க்கெல்லாந்தேவராய் | புருஷோத்தமனுகி (அல்லது) தேவேந்திரன் பொருட்டு வாமனனுகி |

| | |
|---|---|
| உலகங்கொண்ட | மாவலியையிரந்து மூவடிகளால்மூவுலகங்களையும் அளந்துகொண்ட |
| ஒள்ளியீர் | ஒளிகொண்ட பரஞ்சுடரே |
| உம்மையல்லால் | தேவரையல்லாமல் மற்றொருவரையும் |
| எழுமையும் | ஏழுபிறப்பினுள்ளும் |
| துணையிலோமே | துணையாகக் கொண்டிலோமே |

மனமென்பதே சஞ்சல மாதலால் அடியேனுடைய மனதை யவ்வாறு சலிக்கவிடாமல் நிலைக்கச்செய்து பேருவீடளித்தமையால் முன்னேழுபிறவியிலும் தேவரையே தஞ்சமடைந்தே னென்பதிலும் ஐயமுளதோ ? அடைந்திலேனாகில் இப்பிறவியில் மனம் நிலை கொள்ளுமோ கொள்ளா தென்று கருத்து.

## வ்யாக்யாநம்.

(உள்ளம்) இத்யாதி, என்னுடைய ஹ்ருதயமானது ஜநநமரணங்களை நினைத்து உருகாநின்றது எனக்குத் தேவரையொழியத் துணையில்லை யென்கிறார்.

(உள்ளமோ வொன்றிநில்லாது) இத்யாதி, ஹ்ருதயமானது ஓரிடத்தே தரியாதே ஓசையை யுடைத்தான எரிநின்று உண்ணாநின்ற கொள்ளியினுள் ளெறும்பு போலே உருவார் பிறவியை நினைத்து இருபாடெரி கொள்ளியினுள் ளெறும்பே போல வுருகி சிதிலமாகாநின்றது, ஒருதலை மரணம் ஒருதலை ஜநநமிறே.

(குழையுமால்) இவன் சைதன்யத்துக்கு ப்ரயோஜநம் இது பொல்லாதென் றறிகை, அவன் சைதன்யத்துக்கு ப்ரயோஜநம் அப்படியே செய்கை, அதாவது ரக்ஷிக்கையிறே.

( தெள்ளியீர் ) இத்தலையில் கலக்கத்துக் கெதிர்த்தட்டான தெளிவுடையாரைப் பற்றுகிறார்.

(தெள்ளியீர்) இத்யாதி மஹாபலி ஔதார்யத் துக்குங் குறைவுவாராமே தன்னை ஆச்ரயித்த இந்த்ரனுடைய கார்யத்துக்குங் குறைவுவாராதபடி காரியம் பார்த்த தெளிவு, தேவர்க்கெல்லாந் தேவராயிருந்து வைத்து அலம்புரிந்த நெடுந்தடக்கையைத் தாழ ஏற்றுப் பூமியை யளந்துகொண்ட.

(ஒள்ளியீர்) ப்ரயோஜனுந்தானுகிலும் இந்த்ரன் நங்கை பார்த் திருந்தானென்று அத்தாலே வடிவில் பிறந்த புதுக் கணிப்பு, அவன் இவன் கையைப்பார்த்து இருக்கை யிறே இவன் காலவிளம்பமாகக் காரியஞ் செய்தது.

(உம்மையல்லால்) இத்யாதி எங்களுக்கு நாங்களுந்தஞ் சமல்ல, பிறரும் தஞ்சமல்ல, உம்மையே தஞ்சமாக வுடையோம் கோல்துணையா யிருப்பார் சிலரன்றே, அவஸ்தாந்தரத்தை ப்ராபித்தாலும் அரங்கத்துறையு மின்துணைவனையே துணையாகப்போ மவரிறெ. (க)

## பத்தாம்பாட்டு.

சித்தமுஞ்செவ்வைநில்லா தென்செய்கேன்றீவினையேன்
பத்திமைக்கன்புடையே னுவதேபணியாயெந்தாய்
முத்தொளிமரகதமே முழங்கொளிமுகில்வண்ணவென்
அத்தநின்னடிமையல்லால் யாதுமொன்றறிகிலோமே.

### ப்ரதிபதம்.

| | |
|---|---|
| சித்தமும் | என்மனமும் |
| செவ்வை | செவ்வையாக |
| நில்லாது | நிரந்தரம் தேவனா யனுபவிக்கும்படி நிலைகொள்ளாது. |
| தீவினையேன் | அத்தன்மைத் தாகிய தீவினை யுடைய அடியேன் |
| என்செய்கேன் | யாதுசெய்வேன் |
| எந்தாய் | தாய்போல் எமக்குப்பிரியபரனே |
| முத்து | முத்துப்போல் குளிர்ந்தவனே |
| ஒளிமரகதமே | திகழ்கின்ற மரகதம்போன்ற திருமேனியனே |
| முழங்கொளிமுகில்வண்ணா | கர்ஜ்ஜித்து மேலெழுந்து விளங்கும் கருமுகில்போன்ற வண்ண முடையோய் |
| என்னத்த | என்தந்தை (அல்லது) தந்தைபோல் ஹிதபரனே (அல்லது) என்குருவே |

| | |
|---|---|
| பத்திமைக்கு | பரபத்திக்கு |
| அன்புடையேனுவதே | அடியேன் தேவரை யனுபவிக்க வொண்ணுமல் அது என்னைப் ப்ரவசஞ் செய்யாமல் அன்புசெய்யும் வகையினையே |
| பணியாய் | அருளிச்செய்தருளாய் |
| நின்னடிமையல்லால் | தேவருக்கு கைங்கரியஞ் செய்வ தல்லாமல் |
| யாதுமொன்று | மற்றுயாதேனு மொன்றினையும் |
| அறிகிலோமே | யானுமறியேன் என்னைச்சார்ந்தோரு மறிந்திலர்களே |

## வ்யாக்யாநம்.

(சித்தம்) இத்யாதி, ஸம்சாரத்தை யஞ்சி உன் திருவடிகளைப் பற்றினவளவே திருவடிகளிலே பரமபக்தியு முண்டாயிற்றென்கிறுர்.

(சித்தமுஞ் செவ்வைநில்லாது) நீஞ்சப்புக்கு வாய்கரையிலே தெப்ப மிழப்பாரைப்போலே அநுபவிக்கப் புக்கால் தரித்து நிற்க மாட்டுகிறதில்லை நெஞ்சு.

(என்செய்கேன் தீவினையேன்) பக்திபாரவஶ்யத்தாலே அநுபவிக்க போகாதபடி பாபத்தைப்பண்ணினேன் என்செய்கேனென்று அநுசந்திக்க செயல்மாட்சி, உத்தேஶ்யவிரோதிபாப மாமத்தைப்பற்றித் தீவினை யேனென்கிறுர்.

( பத்திமைக் கன்புடையே னுவதே பணியாயெந்தாய் ) என்ற னளவல்லால் யானுடைய வன்பு என்றும்படியே எற்பிடித்த பக்தி யளவாக்கவேணும்.

(எந்தாய்) பக்த்தியை யுண்டாக்கின நீயே யளவுபடுத்த வேணும்.

(முத்தொளி மரகதமே) பக்திஜனகமான வடிவு முத்தினுடையகுளிர்த்தியையும்மரகதத்தினுடைய ஶ்யாமத்தையும் உடைத்தாயிருக்கை.

(முழங்கொளி முகில்வண்ணு) மின்னிமுழங்கி வில்லிட்டு ஸஞ்சரிப்ப தொரு மேகம்போன்ற நிறத்தை யுடைய வனே

(என்னத்த) அழகுக்குத் தோற்று என்னுடைய னென்கிறார், நீர் சித்தமுஞ் செவ்வையில்லாது, தீவினையே னென்பதாய்க் கிடந்து என்று இயக்குப் படுகிறீர். இத்தைவிட்டு வேறொன் றொடே போது போக்கினாலோவென்ன,

(நின்னடிமை) இத்யாதி, உன் திருவடிகளிற் கைங்கர்ய மொழிய வேறொன் றறியேன், மறந்தே னுன்னை முன்னம் என்றது போக்கி, எது செய்தால் மறக்கே னென்னும்படிப் பண்ணிவைத்தபின்பு வேறொன்றை யறிய விரகுண்டோ (ய)

## பதினோராம்பாட்டு.

தொண்டெல்லாம்பரவிநின்னைத் தொழுதடிபணியுமாறு
கண்டுதான்கவலைதீர்ப்பா னாவதேபணியாயெந்தாய் ❋
அண்டமாயெண்டிசைக்கு மாதியாய்நீதியான ❋
பண்டமாம்பரமசோதி நின்னையேபரவுவேனே. ❋

### ப்ரதிபதம்.

| | |
|---|---|
| தொண்டெல்லாம் | ஸர்வவித கைங்கர்யங்களையும் |
| பரவி | குறையறச்செய்து |
| நின்னை | தேவரையே |
| தொழுது | சரணம்புக்கு |
| அடிபணியுமாறு | திருவடி தொழும்படியாக |
| கண்டு | ஆவலுற்று |
| தான்கவலை தீர்ப்பா னாவதே | ஒருவன்தானே தன் துன்பத்தைத் தீர்த்துக்கொள்வதாகுமோ நீயே யுன்றே தீர்க்கவல்லாய் |
| எந்தாய் | நிர்வாஹகனாகிய எம்பிரானே |
| பணியாய் | நீயே யருளிச்செய்யாய் |
| அண்டமாய் | ப்ரஹ் மாண்டத்திற்கும் நிர்வாஹகனாகி |

| | |
|---|---|
| எண்டிசைக்கும் | எட்டுத் திசைகளிலுமுள்ள தேவர்களுக்கும் |
| ஆதியாய் | காரணமுமாகி |
| நீதியானபண்டமாம் | முறை தப்பாதபடி சேதனர்களுக்கு நற்பொருளாகுகின்ற |
| பரமசோதி | பரஞ்சுடரென்னப்படுகின்ற ப்ரஹ்மமனே |
| உன்னையே | தேவரையே |
| பரவுவேனே | இடைவிடாது துதிசெய்வேன் |

## வ்யாக்யாநம்.

(தொண்டெல்லாம்) இத்யாதி, செய்யுமடிமையெல்லாம் அடைவுகெட்டுப் பேசி "அஹம்ஸர்வம்கரிஷ்யாமி" (అహంసర్వంకరిష్యామి) என்றும்படியே.

(நின்னைத்தொழுத) உன்னைக் கண்டுவைத்து அடைவுபடத் தொழப்போமோ.

(அடிபணியுமாறுகண்டு) தப்பாமே மநோரதித்து.

(தான்கவலை தீர்ப்பானுவதே) தன்னாலே மநோதுஃகத்தைத் தீர்த்துக் கொள்ளலாமே, என்னாலே மனக்கவலை போக்கி யடிமைசெய்யப் போமோ! மனக்கவலை தீர்ப்பா ரவரிறே.

(பணியாயெந்தாய்) நிர்வாஹகனான நீயே அருளிச்செய்யாய்.

(அண்டமாய்) இத்யாதி, அண்டாந்தர்வத்திக்கும் நிர்வாஹகனாய் எட்டுத் திக்கிலுள்ள தேவதைகளுக்கும் காரணமாய் முறை தப்பாதபடி.

(பண்டமாம்) தனமாம் பண்டமென்பது, தனம், இவ்வாத்மாவுக்கு தனமானவனே.

(பரமசோதி) பரஞ்ஜ்யோதிச் சப்த வாச்ய னானவனே

(உன்னையே பரவுவேனே) உன்னையே யடைவுகெட ஸ்தோத்ரம் பண்ணுமத்தனை. (ய

## பன்னிரண்டாம்பாட்டு.

ஆவியையரங்கமாலை யழுக்குடம் பெச்சில்வாயாற், றூய்மையிற் றொண்டனேனுன் சொல்லினேன் றொல்லை நாமம், பாவியேன் பிழைத்தவாறென் றஞ்சினேற்கஞ்ச லென்று, காவிபோல்வண்ணர்வந்தென் கண்ணுளேதோன்றினரோ.

ப்ரதிபதம்.

| | |
|---|---|
| ஆவியை | உலக மனைத்துக்கும் ஆருயிரானவனாகிய கோயிலில் எழுந்தருளியிருக்கும் |
| அரங்கமாலை | நம்பெருமாளை |
| அழுக்குடம்பு | பற்பல அற்பர்களைப் பணிந்தழுக்குற்ற காயத்தினால் பணிந்தும் |
| எச்சில்வாயால் | அவர்களையே பலவாருக ஸ்தோத்திரஞ்செய்து எச்சிலான வாயினால் துதிசெய்தும் |
| தூய்மையில் | மனத்தெளிவுமற்ற |
| தொண்டனேன் | பல விஷயங்களிலு மடிமை பூண்டவனும் |
| நான் | நானென்னும் அஹங்கார முடைய அடியேன் |
| தொல்லைநாமம் | அநாதியாயுள்ள திருநாமத்தையும் |
| சொல்லினேன் | தானுங் கெட்டு சந்திரபுஷ்கரணியையுங்கெடுத்தாளென்கிற பழைமொழியின்படி அத் திருநாமமும் கெடுமோவென் றஞ்சுமாறு கூறினேன் |
| பாவியேன் | இவ்வண்ணம் பாவியானநான் |
| பிழைத்தவாறு | உஜ்ஜீவிக்கத்தக்க விதம் |
| என்று | யாதோவென்று |
| அஞ்சினேற்கு | அச்சங்கொண்ட அடியேனுக்கு |
| அஞ்சல் | நீ யஞ்சற்க |
| என்று | என்றருளிச்செய்து |
| காவிபோல் | கருங்குவளைபோன்ற |

| | |
|---|---|
| வண்ணர் | உருவமழகிய நம்பி |
| வந்து | தாமே யெழுந்தருளி |
| என்கண்ணுளே | அடியேன்கண்ணினுள்ளே |
| தோன்றினாரோ | ஆவிர்ப்பாவஞ் செய்தருளினாரோ |

நாம்கொடும்பாவியாதலால் அவனைத் தொழினும் துதி செயினும் நாமங்கூறினும் கண்ணுறினும் நம்பாவம் அவனை யுஞ் சேர்ந்தழிக்குமோவென் றஞ்சி யுபேக்ஷித் திருக்கினும் பேரருளாளன் தாமே யெழுந்தருளி ஸேவைஸாதித் தடியே னை யுஜ்ஜீவிப்பித் தருளினானென்று சேதனர் பாலுள்ள இழி வினையும் பெருமாள்பாலுள்ள வுயர்வினையும் கணிசித்தருளிச் செய் தாராழ்வார்.

## வ்யாக்யாநம்.

(ஆவியை) இத்யாதி, உபயவிபூதியையு மழிக்கப்புக் கே னென்கிறார் (ஆவியை) உலகங்கட்கெல்லா மாருயிரானவனை.

(அரங்கமாலை) கண்ணுக்குத் தோற்றுதபடி நின்று தா ரகமாகை யன்றிக்கே கண்ணாலேகாண வ்யாமோஹந்தானொ ரு வடிவென்னலாம்படி யிருக்கை.

(அழுக்குடம் பெச்சில்வாயால்) எத்தனைபேர் காலிலே விழுந்தது, எத்தனைபேரை ஸ்தோத்ரம் பண்ணிற்று.

(தூய்மையில்) தப்பச்செய்தோ மென்கிற அநுதாப மில்லாத நான்.

(தொண்டனேனான்) கண்டதெல்லா வற்றினும் தொ ண்டுபட்டுத் திரிந்தநான்.

(சொல்லினேன் றொல்லைநாமம்) நித்யசூரிக ளினியென் கொண்டு ஜிவிக்கக்கடவர்கள் சொல்லியற்றது இதுக்குமுன் பழுந் தறியாத தொன்று, நமோநாராயண வென்றும் பல் லாண்டு பாடி ஜீவிக்கக் கடவர்கள் என்கொண்டு ஜீவிக்கக் கடவர்க ளினி.

(பாவியேன் பிழைத்தவாறென் றஞ்சினேற்கு) தொல்லை நாமத்தை நான் சொல்லி விடுகையன்றிக்கே நானுஞ் சொன் னேன் நமரு முரைமினென்று இப்படி யழிப்பா ருண்டோ

ஸாத்விகனு யிருப்பா னொருவன், ரஜஸ்ஸு தலையெடுத்து மத்தியராத்ரத்திலே நெருப்பைவைத்துஸத்வம் தலையெடுத்த வாறே அநுதபிக்குமா போலே, பாவியேன் நான் தப்பினே னென்று அஞ்சினேனுக்கு.

(அஞ்சலென்று) உன்கார்யம் உனக்கே பரமோவென்று "மாஶுச:" (ஸ்ரீகீதை) என்று அஞ்சாதே யென்று.

(காவிபோல் வண்ணர்வந்து) வடிவழகைக் காட்டி மருந்தை யிட்டுப் பொருந்தவிட்டார்.

(காவி) கருங்குவளை இவ்வடிவை நம் கண்ணாலே நோக்கி யழிக்க வொண்ணாதென்று கண்ணைச் செம்பிளித்தேன்.

(கண்ணுளே தோன்றினாரோ) கண்ணுக்குள்ளேதோன்றினாரோ இவர்கண் செம்பிளித்துப் பார்க்கிறதெப்போதோ வென்று பார்த்திருந்தான்போலே காணுமவனும். (௰௨)

## பதிமூன்றாம்பாட்டு.

இரும்புநன்றுண்டநீரும் போதரும்கொள்கவென்தன் *
அரும்பிணிபாவமெல்லா மகன்றனவென்னைவிட்டுச் *
சுரும்பமர்சோலைசூழ்ந்த வரங்கமாகோயில்கொண்ட *
கரும்பினைக்கண்டுகொண்டேன்கண்ணிணைகளிக்குமாறே

### ப்ரதிபதம்.

| | |
|---|---|
| இரும்பு | பழுக்கக்காய்ச்சப்பட்ட இரும்பினால் |
| நன்று | நன்றாக |
| உண்ட | உண்ணப்பட்ட |
| நீரும் | ஜலமும் |
| போதரும் | மீளவும் அகன்றுசெல்லும் |
| கொள்க | என்று நீங்களுணர்க சேதநர்காள் |
| என்தன் | பிரகிருதிசம்பந்தத்தால் வாய்க்கிலும் எனக்கு ஸஹஜமென்று அபிமானிக்கப் பெற்ற |
| அரும் | பொறுப்பதற்கரிய |

பிணி — பற்பலநோய்களைத்தருகின்ற
பாவமெல்லாம் — பாவங்களெல்லாம்
என்னைவிட்டுஅகன்றன, — எனனைவிட்டுத் தொலைந்தன ஆதலால்
சுரும்பு — வண்டினங்கள்
அமர் — அமர்ந்துள்ள
சோலை — வனங்களினால்
சூழ்ந்த — சூழப்பட்ட
அரங்கமாகோயில் — திருவரங்கமென்னும்பெரியகோயிலை
கொண்ட — உகப்பிடமாகக்கொண்ட
கரும்பினை — அடியார்களுக்குக் கரும்பு போலத் தித்திக்கும் நம்பெருமாளை
கண்ணிணை — இரண்டுகண்களும்
களிக்குமாறு — எப்பொழுதும் ஆநந்தமுறும்படியாக
கண்டுகொண்டேன் — இதுவே போக்கியமென்றறிந்து கண்ணுற்று இனி யசையாதபடி நிறுத்திக்கொண்டேன்

இரும்பு நன்றுண்டநீா வெளிப்படாமல் அதனுள்ளே லீனமாவதுபோல் என்னிடத்இல் லீனமாகிய என்பாவங்களும் நீங்கினமையால் அந்நீரும்நீங்கி வெளிப்பட்டுப் பெருகுமெனவே கொள்ளவேண்டும் இல்லையாகில் என்பாவங்கள் மாத்திரம் எவ்வண்ணம் நீங்கின அவை நீங்கினமையா லன்றோ யான் நம்பெருமாளைக் கண்டு கொண்டேன் பாவிகள் காண்பார்களோ காணார்களே என்று கருத்து.

## வ்யாக்யாநம்.

(இரும்புநன் றுண்டநீரும் போதருங்கொள்க) அக்கினியாலே ஸந்தப்தமான அயஸ்ஸாலே பீதமான ஜலமும் போரும் எத்தாலேயென்னில்.

(என்ற னரும்பிணி பாவமெல்லா மகன்றன வென்னைவிட்டு) இரும்புண்ட நீர்போற் சொல்ல வேணுமோ? நான்பண்ணின துஷ்கர்மங்களும் தத்பலமான துஃகங்களுமன்றோ வென்னை விட்டுப்போயிற்று, ஆத்மாவுக்கு நிரூபகதர்மமான ஜ்ஞாநா நந்தங்களோ பாதி இதுவும் ஸஹஜ மென்னும்படி

போந்த விவையுமன்றே? வென்னைவிட்டது. எம்பெருமானை யகலுகையால் வந்தவ்யஸநமும் அகலுகைக்கு ஹேதுக்களும் போயிற் றென்னவுமாம், அவை போயிற்ருகில் நீர் பின்பு செய்த தென்னெனில்.

(சுரும்பமர்) இத்யாதி, வண்டுகள் பொருந்தி யிருந்துள்ள சோலையாலே சூழப்பட்ட வரங்கமாகிற கோயிலைத் தனக்குக் கோயிலாகக் கொண்ட.

(கரும்பினைக் கண்டுகொண்டேன்) இது கண்ணாலே தின்னுங்கரும்பு.

(என் கண்ணிணை களிக்குமாறே) எவ் விஷயங்களைக் கண்டுகளித்த கண்கள எவ்விஷயங்களைக் கண்டு களிக்கிறது ப்ரீதி தத்வம் கணுக்கண் டறியாதகண்கள் கிடீர் இன்று களிக்கிறது. (௰௩)

## பதினான்காம்பாட்டு.

காவியைவென்றகண்ணார் கலவியேகருதிநாளும் ❊
பாவியேனாகவெண்ணி யதனுள்ளேபழுத்தொழிந்தேன்
தூவிசேரன்னமன்னுஞ் சூழ்புனற்குடந்தையானைப் ❊
பாவியேன்பாவியாது பாவியேனாயினேனே. ❊

### ப்ரதிபதம்.

| | |
|---|---|
| காவியை | கருங்குவளையை |
| வென்ற | வெற்றிகொண்ட |
| கண்ணார் | கண்களையுடைய பரத்தையல்களினுடைய |
| கலவியே | புணர்ச்சியையே |
| கருதி | போக்கியமாக நினைத்து |
| நாளும் | எப்பொழுதும் |
| பாவியேனாக | நல்வினை சிறிதுமற்ற மஹாபாவியாகும்படியாக |
| எண்ணி | அபிநிவேசங்கொண்டு |
| அதனுள்ளே | அப்புணர்ச்சி யின்பத்தி னுள்ளேயே |

| | |
|---|---|
| பழுத்து | முதிர்ந்து |
| ஒழிந்தேன் | திறமையுள்ளவனாயி லிவ் வண்ணங் கெட்டேன் |
| பாவியேன் | கொடும்பாவியாகிய யான் |
| தூவிசேர் | சிறகினைப்பொருந்திய |
| அன்னம் | ஹம்ஸபக்ஷிகள் |
| மன்னும் | அடைந்துமகிழும் |
| சூழ் | இருபுறங்களிலுஞ் சூழ்ந்துள்ள |
| புனல் | திருக்காவிரி நீருடைய |
| குடந்தையானை | திருக்குடந்தையிற் கிடக்கும் ஆராவமுதனை |
| பாவியாது | நிரந்தரந் தியானஞ்செய்யாமல் |
| பாவியேன் | மேன்மேலும் பாவத்திற் கேதுவான பாவமுடையவ னாகவே |
| ஆயினேனே | ஆயினேன் |

## வ்யாக்யாநம்.

(காவியை) இத்யாதி, கருங்குவளையை வென்ற கண்ணார் கலவியே கருதி எப்போதும், "அவர் தருங் கலவியே கருதி யோடினேன்,, என்றும்படியே "அவர்கள் கலவியே கருதி, நினைத்திருந்தே சிரமந்தீர்ந்தேன்,, என்றும் படியே அதுக்கு எதிர்த்தட்டாக வித்தையே நினைத்து.

(நாளும் பர்வியேனாகவெண்ணி) அநாதிகாலம் ஒரு சுக்ருத லேசமும் பண்ணாத மஹா பாபியாக மநோரதித்து.

(அதனுள்ளே பழுத்தொழிந்தேன்) சக்கரவர்த்திவெண்கொற்றக் குடைநிழலிலே பழுத்தாற்போலவும் ஆழ்வார் உனது பாலே பொற் சீரிற் பழுத்து ஒழிந்தாற்போலவும்.

(தூவிசே ரன்னமன்னும்) சிறகையுடைய வன்னம்பிரியா தேவர்த்திக்கிற தேசம், ஹம்ஸ பரமஹம்ஸர் பிரியாதே வர்த்திக்கிற தேசம்.

(பாவியேன்) வகுத்தவிஷயம் அஸந்நிஹிதமா யிழந்தேனோ வாளா விருந்தொழிந்தேன் கீழ்நாள்க ளெல்லாம் என்

னும் பழுதே பலபகலும் போயின வென்றஞ்சி யழுதே னென்றுமாப் போலவும் இழந்த நாளைக்கு துஃகங்கொண் டாடுகிறார்.

(பாவியாது) நினையாது.

(பாவியேனாயினேனே) பாவிக ளெண்ணுக்குச் சிறுவிரலானேன், முன்பு பண்ணின பாபமிதுவானால் இதுக்கு மேலும் பலிப்ப திங்ஙனேயிறே, தீயதும்நல்லதும் கார்யகாரண பாவத்தாலே யிறேவருவது. (௰௪)

## பதினைந்தாம்பாட்டு.

முன்பொலாவிராவணன்றன் முதுமதிளிலங்கைவேவித்
தன்பினாலனுமன்வந்தாங் கடியிணைபணியநின்றாற் *
கென்பெலாமுருகியுட்கிட் டென்னுடைநெஞ்சமென்னு
அன்பினால்ஞானநீர்கொண் டாட்டுவனடியனேனே. *

### ப்ரதிபதம்.

| | |
|---|---|
| முன் | திரேதாயுகாந்தத்தில் |
| பொலா | மிகக் கொடியனாகிய |
| இராவணன்தன் | இராவணப்பயலினுடைய |
| முது | வலிமைபொருந்திய |
| மதிள் | மதிளையுடைய |
| இலங்கை | இலங்காபுரியை |
| வேவித்து | நீறாகும்படி யெரித்து |
| அன்பினால் | பத்திரசத்தினால் |
| அனுமன் | ஸ்ரீமதாஞ்சனேயன் |
| வந்து | எழுந்தருளி |
| ஆங்கு | அவ்விடத்தில் |
| அடியிணைபணிய | திருவடிதொழ |
| நின்றாற்கு | பிராட்டியின் விருத்தாந்தங் கேட்டு மயங்கிநின்ற பெருமாளுக்கு |
| என்பெலாம் | எலும்பெல்லாம் |
| உருகி | அவ்வவஸ்தையை நினைந்துருகி |

| | |
|---|---|
| உட்கிட்டு | மடிந்து |
| என்னுடை | அடியேனுடைய |
| நெஞ்சமென்னும் | மனமென்னும் |
| அன்பினால் | ஆசையினால் |
| ஞானநீர்கொண்டு | ஞான மென்னுந் திருமஞ்சனங் கொண்டு |
| அடியனேனே | அடிமைபூண்டவடியனேனேன் |
| ஆட்டுவன் | திருமஞ்சனமாட்டுவேன் |

## வ்யாக்யாநம்.

(முன்பொலா) இத்யாதி, முன்புத்தை யிழ வெல்லந்தீர நீராட்டுகிறார்.

(முன்பொலா) இத்யாதி, அதுவு மொருகாலமே யென்று வயிறு பிடிக்கிறார், ஸ்ரீராமாயணத்தில் பேசின பரப்பை யெல்லாம் ஒரு வார்த்தையாலே சொல்லுகிறார், ஏக திரவ்யத்தைப் பல பிந்நமாக்கினாற்போலே தாயையுந் தமப்பனையும் பிரித்த பயல்.

(முதுமதிள்) வலியமதிள்.

(இலங்கை வேவித்து) திருவடி வாலினெருப்பாலே சுடுவித்து, நெருப்புங் காற்றுங் கூடினாற்போலேயிறே வாலிலே நெருப்பு.

(அன்பினா லனுமன்வந்து) காலாலன்றுபோலே அநுபந்தீக்ஷித்தும் கடல்கடந்தும் யுத்தம்பண்ணியு மிளைத்திருக்கச் செய்தேயும் பிராட்டியைத்திருவடி தொழுதும் "த்ருஷ்டா ஸீதா" (த்ருஷ்டாஸீதா) என்று பெரிய ப்ரீதியோடே யிறே வந்தது.

(ஆங்கடியிணை பணியநின்றார்க்கு) பிராட்டி விருத்தாந் தங்கேட்டு ஸப்தராய் நின்றவர்க்கு.

(என்பெலாமுருகி யுட்கிட்டு) அந்நிலையை நினைத்து சிதிலரானபடி.

(என்னுடை நெஞ்சமென்னு மன்பினால்) இத்யாதி, இவர் நெஞ்சிலே யுண்டான வன்பன்று, நெஞ்சென்று பேராய் ப்க

வத் ப்ரேமமே வடிவாயிருக்கிற வன்பாலே ஜ்ஞானமாகிற திருமஞ்சநத்தாலே நீராட்டுவேன், அன்புடனே கூடின நீர் அந்நீர்க்கு ஸம்ஸ்காரமிறே அன்பு.

(அடியனேனே) அங்குற்றைக்கு போக்யராவது அடியராளுற்போலே காணும். (௰௫)

## பதினாறும்பாட்டு.

மாயமான்மாயச்செற்று மருதிறநடந்துவையம் *
தாயமாபரவைபொங்கத் தடவரைதிரித்துவானோர்க் *
கீயுமாலெம்பிரானார்க் கென்னுடைச்சொற்களென்னும் *
தூயமாமாலைகொண்டு சூட்டுவன்றொண்டனேனே. *

### ப்ரதிபதம்.

| | |
|---|---|
| மாயம் | கபடத்தையுடைய |
| மான் | மானுருவாகிய மாரீசன் |
| மாய | முன்போலன்றிக்கேஇறந்துவிடும்படி |
| செற்று | அம்பினாலடித்து |
| மருது | மருதமரங்கள் |
| இற | இற்றுவீழும்படி |
| நடந்து | தவழ்ந்துநடந்து |
| வையம் | உலகங்களை |
| தாய | திரிவிக்கிரமனாகி யளந்த |
| மா | பெரிய |
| பரவை | திருப்பாற்கடல் |
| பொங்க | பொங்கிமேலெழும்படி |
| தடம் | பெருமைபொருந்திய |
| வரை | மந்தரமலையை |
| திரித்து | அரும்பைப்போலத் திரித்துக் கடைந்து |
| வானோர்க்கு | விண்ணவர்களுக்கு |
| ஈயும் | அமிர்தத்தை யளித்தருளும் |
| மால் | தொண்டர்களிடத்தில் வியாமோஹமுடைய |

| | |
|---|---|
| எம்பிரானார்க்கு | எமக்கு ரக்ஷகனாகிய பகவானுக்கு |
| தொண்டனேன் | நித்திய தாஸனாகியவடியேன் |
| என்னுடை | அடியேனுடைய |
| சொற்களென்னும் | பாட்டுக்களென்னும் |
| தூய | தூய்மையதாகிய |
| மா | நெடிய |
| மாலை | அலங்கலை |
| கொண்டு | அவனுக்கே தகுமென வறிந்து |
| சூட்டுவன் | சூட்டி யலங்கரித்து கிருதார்த்தனாகு வேன் |

## வ்யாக்யாநம்.

(மாயமான்) இத்தியாதி கீழ்ப்பாட்டிலே திருமஞ்சனம் பண்ணிஇப்பாட்டிலே திருமாலை சாற்றுகிறார்.

(மாயமான்) பொல்லா விராவண னென்றதுக்கடியான ஜந்து விசேஷமிறே, (மாயசெற்று) முன்புபோலே தொத் தம்பாக விடாதே பிணத்தையும் மாய்த்து.

(மருதிறநடந்து) அடலசேரிணை மருதற்று வீழ நடை கற் றவனிறே, தளர்நடை யிடுகிற போதே ஒன்னார் தளர அடியிட்டபடி.

(வையந்தாய்) முன்புற்றை யது வளர்ந்த பண்ணின வ்யாபாரம் நடுவு தவிழுகிறபோதை வ்யாபாரம் இது பிறந்த வன்றே பண்ணின வ்யாபாரம்பூமியை அநாயாஸேந அளந்து கொண்டு.

(அம்மா பரவைபொங்க) அப் பெரியகடல் தயிர்த்தாழி பட்டது பட.

(தட்வரைதிரித்து) கடலைக் கண்செறி யிட்டாற்போலே யானமலையைப் பிள்ளைகள் திரி தரும்பைத் திரிக்குமாப் போ லே திரித்து.

(வானோர்க்கீயுமால்) உடம்பு நோவக் கடல் கடைந்து கொடுத்தது ப்ரயோஜநாந்தர பரர்க்கு, பிச்செறினவர்க ளெ ண்ணி யன்றிறே செய்வது.

(எம்பிரானுற்கு) எனக்கு உபகாரகரானவர்க்கு.

(என்னுடை) இத்தியாதி, தேவஜாதி சொல்போலன்றிக்கேப்ரயோஜன நிரபேக்ஷமான சொற்களாகிற செவ்வியழியாத மாலையைக் கொண்டு.

(சூட்டுவன் றெண்டனேனே) இத்தாலல்லது செல்லாதசபலன், அநசூயை பிராட்டிக்குச்சூட்டினுற்போலே. ()

## பதினேழாம்பாட்டு.

பேசினார்பிறவிநீத்தார் பேருளான்பெருமைபேசி ❋
ஏசினாருய்ந்துபோனா ரென்பதிவ்வுலகின்வண்ணம் ❋
பேசினேனேசமாட்டேன் பேதையேன்பிறவிநீத்தற் ❋
காசையோபெரிதுகொள்க வலைகடல்வண்ணர்பாலே. ❋

ப்ரதிபதம்.

| | |
|---|---|
| பேசினார் | பெருமானுடைய குணங்களைப் புகழ்ந்துரைசெய்தவர்கள் |
| பிறவி | ஸம்ஸாரத்தை |
| நீத்தார் | கடந்து சென்றனர்கள் |
| பேருளான் | புகழினையுடைய எம்பிரானது திருப்பேர்நகரானது |
| பெருமை | மகிமையை |
| பேசி | இகழ்ந்துரைத்து |
| ஏசினார் | ஏசிய சிசுபாலாதிகளும் |
| உய்ந்துபோனார் | நற்கதிபெற்று உஜ்ஜீவித்தார்கள் |
| என்பது | என்றுரைசெய்வது |
| இவ்வுலகின் | இந்த லோகத்தினுடைய |
| வண்ணம் | பண்பு |
| பேதையேன் | மதிகேடனாகிய யான் |
| பேசினேன் | பகவானுடைய் குணங்களைப் புகழ்ந்துரைசெய்தேன் |
| ஏசமாட்டேன் | இகழ்ந்தேசன் |
| பிறவி | ஸம்ஸாரத்தை |

| | |
|---|---|
| நீத்தற்கு | கடப்பதற்கு |
| அலை | அலைகளையுடைய |
| கடல் | கடல்போன்ற |
| வண்ணர்பால் | வண்ணம்பொருந்திய எம்பிரான்மீது |
| ஆசையோ | அபேக்ஷையோவெனில் |
| பெரிது | மிகவும்பெரிது |
| கொள்க | என்றறிக |

## வ்யாக்யாநம்.

(பேசினார்) இத்தியாதி, திருப்பேர்நகரான் பெருமைபே சினார் ஸம்ஸாரத்தைக் கடந்தார்கள்.

(பேருளான் பெருமைபேசி யேசினா ருய்ந்துபோனார்) இவன் பெருமையை யேசின சிசுபாலாதிகளும் உய்ந்துபோ னார்கள்.

(என்பதிவ் வுலகின்வண்ணம்) என்பது ஶாஸ்திர மர் யாதை ஏசுவார்க்கும் அவன் குணங்களைச் சொல்லி யேச வேணும், ஆளவந்தார் நாட்டை யழியாமைக்காக சிசுபால னைக் கொற்றவன் வாசலுக்குள்ளே சுழற்றி யெறிந்தா னத் தனை ருசி முன்னாகப் பெறுவதே பேறுவதென்று அருளிச் செய்தார்.

(பேசினேன்) உண்ணப்புக்கு மயிர்ப்பட்டு அழகிதாக உண்டே னென்றுமாப்பொலே.

(ஏசமாட்டேன்) ஏசிப் பெறும் மோக்ஷம் வேண்டா.

(பேதையேன்) அறிவுகேடன்.

(பிறவிநீத்தற்கு ஆசையோ பெரிதுகொள்க) ஸம்ஸாரத் தைவிட ஆசை கரைபுரண் டிராநின்றது. ஆனால் குறையென் னென்ன.

(அலைகடல்வண்ணர்பாலே) அது அவன்கையதாயிற்றே, நாம் செய்வதேன், கரம ப்ராப்தி பார்த்திருக்க வொண்ணாத வடிவு படைத்தவர். (௰எ)

## பதினெட்டாம்பாட்டு.

இளைப்பினையியக்கநீக்கி யிருந்துமுன் னிமையைக் கூட்டி, அளப்பிலைம்புலனடக்கி யன்பவர்கண்ணேவை த்து, துளக்கமிற்சிந்தைசெய்து தோன்றலுஞ்சுடர்விட் டாங்கே, விளக்கினை விதியிற்காண்பார் மெய்ம்மையே காண்கிற்பரோ.

### ப்ரதிபதம்.

| | |
|---|---|
| இளைப்பினை | இளைப்பைத்தருவதாகியஸம்ஸாரத்தை |
| இயக்க | ப்ற்றற்றுச் செல்லும்படியாக |
| நீக்கி | நிவிருத்திசெய்து |
| இருந்து | யோகாஸநத்தி லுட்கார்ந்து |
| முன்னிமையைக்கூட்டி | இமையின் முன்புறங்களைக் குவித்து நாசியின் நுனியைநோக்கி |
| அளப்பில் | அளவு கடந்துள்ள |
| ஐம்புலனடக்கி | ஐந்து புலன்களையு மடக்கி |
| அன்பு | விஶ்வாஸத்தை |
| அவர் கண்ணே | அந்த பகவானிடத்திலேயே |
| வைத்து | நிலைக்கச்செய்து |
| துளக்கமில் | அச்சமில்லாமல் |
| சிந்தைசெய்து | தியானம்பண்ணி |
| சுடர் | ஒளிகளை |
| விட்டு | பரவும்படி விடுத்து |
| தோன்றலும் | தோற்றுகின்ற ஜ்ஞானத்தாலும் |
| ஆங்கே | அப்பொழுதே அவ்விடத்திலேயே |
| விளக்கினை | சோதி யுருவாகவே தாந் தங்களி லு ணைக்கப்பட்ட தீபத்தை |
| விதியின் | யோகசாஸ்திர விதியின்படி |
| காண்பார் | உபாஸிக்கவல்ல யோகிகளும் |
| மெய்ம்மையை | என்று முளனாகிய பகவானை |
| காண்கிற்பாரோ | காண்பார்களோ, காணார்கள்;

## வ்யாக்யாநம்.

(இளைப்பினை) இத்யாதி, ஸ்வயத்நத்தால்காண்பார்க்குக் காணப்போகாதென்கிறது.

(இளைப்பினை யியக்கம் நீக்கி) "அவித்யாஸ்மிதாராக த்வேஷாபிநிவேசா:க்லேசா:" (𑌅𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌸𑍍𑌮𑌿𑌤𑌾𑌰𑌾𑌗𑌦𑍍𑌵𑍇𑌷𑌾𑌭𑌿𑌨𑌿𑌵𑍇𑌶𑌾𑌃𑌕𑍍𑌲𑍇𑌶𑌾𑌃) என்றுஞ் சொல்லுகிற கிலேசங்களுடைய ஸஞ்சாரத்தைத் தவிர்த்து.

(இருந்து) காற்றைப் பிடித்திருத்துமாப் போலேயிறே "நாதத்யுச்ச்ரித" (𑌨𑌾𑌤𑍍𑌯𑍁𑌚𑍍𑌛𑍍𑌰𑌿𑌤) மித்யாதியால் சொல்லுகிறபடியே ஓராஸநத்தே யிருந்து.

(முன்னிமையைக் கூட்டி) "ஸம்ப்ரேக்ஷ்ய நாஸிகாக்ரம் ஸ்வம் திசச்சாநவலோகயந்" (𑌸𑌂𑌪𑍍𑌰𑍇𑌕𑍍𑌷𑍍𑌯𑌨𑌾𑌸𑌿𑌕𑌾𑌗𑍍𑌰𑌂𑌸𑍍𑌵𑌂 𑌦𑌿𑌶𑌶𑍍𑌚𑌾𑌨𑌵𑌲𑍋𑌕𑌯𑌨𑍍) என்னும்படியே உள்ளே பார்க்கில் அநுபூத விஷயங்கள் தோற்றும் புறம்பே பார்க்கில் விஷயங்கள் தானே யிருக்குமென்று நடுவேநிற்க.

(அளப்பிலைம் புலனடக்கி) அளவிறந்த இந்திரியங்களை ப்ரத்யக்காக்கி.

(அன்பவர் கண்ணேவைத்து துளக்கமில்சிந்தைசெய்து) அவிச்சிந்ந ஸ்ம்ருதி ரூபமான பத்தியைப் பண்ணி.

(சுடர்விட்டுத் தோன்றலும்) இப்படி சுடர்விட்டுத் தோன்றுகிற ஜ்ஞானத்தாலே.

(விளக்கினை) வேதவிளக்கினை வேதாந்தங்களிலே ஜ்யோதிருபனாக ப்ரதி பாதிக்கப்பட்ட விளக்கினை.

(விதியிற்காண்பார்) சாஸ்த்ரங்களில் விதித்தப்படியே உபாஸித்து அவனைக் காண்பார்.

(மெய்ம்மையேகாண்கிற்பாரே) என்று முளனாயிருக்கிற ஸர்வேச்வரனைக் காணவல்லரோ காணமாட்டாரென்றபடி. அதவா, இப்படி யோக சாஸ்திரத்தில் சொல்லுகிறபடியே உபாஸித்துக் காண்பார்க்குக் காணலாமென்றுமாம். (௰௮)

## பத்தொன்பதாம்பாட்டு.

பிண்டியார்மண்டையேந்தி பிறர்மனைதிரிதந்துண்ணும் *
உண்டியான்சாபந்தீர்த்த வொருவனூருலகமேத்
கண்டியூரரங்கம்மெய்யங் கச்சிபேர்மல்லையென்று
மண்டினாருய்யலல்லால் மற்றையார்க்குய்யலாமே

ப்ரதிபதம்.

| | |
|---|---|
| பிண்டி | பொடிகள் |
| ஆர் | உதிரும்படிபொருந்திய |
| மண்டை | பிரஹ்மாவின் மண்டையோ |
| ஏந்தி | கையிலேந்திக்கொண்டு |
| பிறர்மனை | அயலார் மனைகள்தோறும் |
| திரிதந்து | நிரந்தரம் திரிந்து |
| உண்ணும் | உண்ணத்தக்க |
| உண்டியான் | உணவையுடைய சங்கரனது |
| சாபம் | பிரஹ்மசாபத்தை |
| தீர்த்த | போக்கியருளிய |
| ஒருவன் | ஒப்பாரு மிக்காருமின்றித் த வனேயாகிய பேருளாள |
| ஊர் | உகப்பிடமாகிய |
| உலகமேத்தும் | உலகமெல்லா மேத்தித்தொழு |
| கண்டியூர் | திருக்கண்டியூர் |
| அரங்கம் | திருவரங்கம் |
| மெய்யம் | திருமெய்யம் |
| கச்சி | திருக்கச்சி |
| பேர் | திருப்பேர் |
| மல்லை | திருக்கடல்மல்லை |
| என்று | என்றநுஸந்தித்து |
| மண்டினார் | நெருங்கினவர்களே |
| உய்யலல்லால் | உஜ்ஜீவிப்பதல்லது |
| மற்றையார்க்கு | வேறெவர்களுக்கு |
| உய்யலாம் | உஜ்ஜீவித்தலாகும்ஒருவர்க்குமாக |

## வ்யாக்யானம்.

(பிண்டியார் மண்டையேந்தி) இத்தியாதி, உளுத்தஅளம் பற்றின சுவர்போலே பொடி யுதிருகிற தலையோட்டைக் கையிலேயேந்தி.

(பிறர்மனை திரிதந்துண்ணும்) "முடையடர்த்த சிரமேந்தி மூவுலகும் பலிதிரிவோன்" என்கிறபடியே நெடுங்காலம் கையோட்டைக் கொண்டும்.

(திரிதந்துண்ணு முண்டியான்) தாமஸ வேஷத்தையுடைய ருத்ரன்.

(சாபந்தீர்த்தவொருவன்) ப்ரஹ்மசாபத்தாலே மண்டையேந்தித் திரிந்தவன் சாபம் அவனை விட்டுப்போம்படி பண்ணின அத்விதீயன்.

(ஊர்) இத்யாதி அவனூரான உலகமேத்துந் திருக்கண்டியூர் கோயில் திருமெய்யம் திருக்கச்சி திருப்பேர் திருக்கடல்மல்லையென்றும்.

(மண்டினா ருய்யலல்லால்) அவனுகந்தருளின வித்திருப்பதிகளிலே நெஞ்சு மண்டினவர்கள் உய்யலல்லது.

(மற்றையார்க் குய்யலாமே) அல்லாதார்க்கு உஜ்ஜீவிக்க விரகுண்டோ. (௰௯)

## இருபதாம்பாட்டு.

வானவர்தங்கள்கோனு மலர்மிசையயனுநாளும் *
தேமலர்தூவியேத்துஞ் சேவடிச்செங்கண்மாலை *
மானவேற்கலியன்சொன்ன வண்டமிழ்மாலைநாலைந் *
தூனமதன்றிவல்லா ரொளிவிசும்பாள்வார்தாமே. *

### ப்ரதிபதம்.

| | |
|---|---|
| வானவர் தங்கள்கோனும் | தேவர்களெல்லோர்க்கும் அரசனாகிய இந்திரனும் |
| மலர்மிசையயனும் | தாமரை மலர்மேலுள்ள பிரமனும் |
| நாளும் | தினந்தோறும் |
| தேம் | மதுவினையும் நன்மணத்தையுமுடைய |
| மலர் | புஷ்பங்களை |
| தூவி | அர்ச்சித்து |

| | |
|---|---|
| ஏத்தும் | துதித்துப்பணியும் |
| சேவடி | செவ்விய திருவடிகளையுடைய |
| செங்கண் | செந்தாமரை மலர்போன்ற திருக்கண்களையுடைய |
| மாலை | தொண்டர்பால் வியா மோஹத்தையுடைய பெருமாளைப் புகழ்ந்து. |
| மானவேல் | பெருந் தன்மைபொருந்திய வேலாயுதத்தையுடைய |
| கலியன் | திருமங்கையாழ்வார் |
| சொன்ன | அருளிச்செய்த |
| வண்டமிழ்மாலை நாலைந்தும் | பரமோதாரமாகிய தமிழ்மாலை யிருபதினையும் |
| ஊனமதின்றி | குறைவென்பதின்றி |
| வல்லார் | கற்றறிந்தவர்கள் |
| ஒளிவிசும்பு | பிரகாசம்பொருந்திய பரமபதத் |
| தாமே | தாமே |
| ஆள்வார் | ஆளப்பெறுவார். |

## வ்யாக்யாநம்.

(வானவர்) இத்தியாதி, இந்திரனும் ப்ரஹ்மாவும் எப்போதும் செவ்வியையுந் தேனையும், உடைத்தான புஷ்பங்களைப் பணிமாறி யேத்தும் அழகிய திருவடித் தாமரைகளையுடைய புண்டரீகாக்ஷனை

(மானவேல்) இத்தியாதி, பெருந் தன்மையை யுடைய வேலையுடைய ஆழ்வார் அருளிச்செய்த பரமோதாரமான தமிழ்மாலை நாலைந்து இருபதும் அநந்ய ப்ரயோஜனராய்க் காக்க வல்லவர்கள் தெளிவிசும்பான பரமபதத்தை ஆளப் பெறுவர். (உ0)

திருமங்கையாழ்வார் திருவடிகளேசரணம்.

பெரியவாச்சாம்பிள்ளை திருவடிகளேசரணம்.

## திருக்குறுந்தாண்டக வ்யாக்யாநமும்

ப்ரதிபதமும்,

முற்றுப்பெற்றன.